winmeen.com

# மூன்றாம் வார நடப்பு நிகழ்வுகள்

## ஏப்ரல் 2021

ஏப்ரல் 15-21

**1. சமீப செய்திகளில் இடம்பெற்ற, 'பதிப்புரிமை (திருத்த) விதிகள், 2021'ஐ அறிவித்துள்ள மத்திய அமைச்சகம் எது?**

அ) நிதி அமைச்சகம்

**ஆ) வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகம் ☑**

இ) உள்துறை அமைச்சகம்

ஈ) தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகம்

✓ பதிப்புரிமை (சட்டதிருத்த) விதிகள், 2021'ஐ, மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ளது. இந்தியாவில் பதிப்புரிமை, பதிப்புரிமை சட்டம், 1957 மற்றும் பதிப்புரிமை விதிமுறைகள், 2013'இன் கீழ் நிர்வகிக்கப்படுகிறது. பதிப்புரிமை விதிமுறைகள், 2013 கடைசியாக கடந்த 2016ஆம் ஆண்டு திருத்தப்பட்டது.

✓ பதிப்புரிமை இதழை வெளியிடுவது தொடர்பான புதிய விதிமுறை சேர்க்கப்பட்டுள்ளது. இதன்மூலம் அரசிதழில் வெளியிடவேண்டிய தேவை நீக்கப்படுகிறது. இனி அந்த இதழ் பதிப்புரிமை அலுவலகத்தின் இணைய தளத்தில் கிடைக்கும்.

---

**2. சமீப செய்திகளில் இடம்பெற்ற, 'SARTHAQ' என்பது பின்வரும் எந்தக் கொள்கை தொடர்பான அமலபடுத்தல் திட்டமாகும்?**

அ) வேளாண் சட்டங்கள்



**ஆ) புதிய கல்விக்கொள்கை ☑**

இ) பொதுத்துறை நிறுவனங்களின் கொள்கை

ஈ) சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு

✓ தேசிய கல்விக்கொள்கை, 2020'ஐ அமல்படுத்துவது தொடர்பான உயர் மட்ட கூட்டத்திற்கு மத்திய கல்வியமைச்சர் இரமேஷ் பொக்ரியால் தலைமை தாங்கினார். 'மாணாக்கர்கள் & ஆசிரியர்கள்' தரமான கல்வி மூலம் முழுமையான முன்னேற்றம் (SARTHAQ) என்ற பெயரில் பள்ளி கல்விக்கான பரிந்துரைப்பு அமலாக்கத் திட்டமும் வெளியிடப்பட்டது.

---

**3. வானியல்குறித்து, சமீபத்திய செய்திகளில் இடம்பெற்ற, 'ஒசைரிஸ்' என்றால் என்ன?**

அ) விண்கல்



ஆ) கருந்துளை

**இ) புறக்கோள் ☑**

ஈ) சிறுகோள்

✓ HD 209458 b என்று அதிகாரப்பூர்வமாக அழைக்கப்படும் 'ஒசைரிஸ்', புவியின் சூரிய மண்டலத்திற்கு அப்பால் வானியலாளர்கள் கண்டறிந்த முதல் கோளாகும். நேச்சர் இதழில் வெளியிடப்பட்ட புதிய ஆய்வின்படி, ஒசைரிஸின் வளிமண்டலத்தில் 6 வேதிப்பொருட்கள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. வேதியியல் பொருட்களின் கலவை, அந்தப் புறக்கோள் அதன் தற்போதைய நிலையை விட 100 மடங்கு தொலைவில் உள்ளது என்பதை உறுதிப்படுத்துகிறது.

---

**4. 'PS சோரோஸ்டர்' என்ற பெயரில் ₹100 கோடி மதிப்புள்ள விரைவு ரோந்துக்கப்பலை, இந்தியா, எந்த நாட்டிடம் ஒப்படைத்துள்ளது?**

அ) ஜெர்மனி



ஆ) ஐக்கிய அமெரிக்க நாடுகள்

**இ) சீஷெல்ஸ் ☑**

ஈ) பிரான்ஸ்

✓ இந்தியா, 'PS சோரோஸ்டர்' என்ற விரைவு ரோந்துக்கப்பலை முறையாக சீஷெல்ஸிடம் ஒப்படைத்தது. சீஷெல்ஸ் அதிபர் வேவெல் ராம்கலவனுடனான மெய்நிகர் சந்திப்பில் பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்றார்.

✓ இது, 2005ஆம் ஆண்டு முதல் சீஷெல்ஸுக்கு பரிசளிக்கப்படுகிற இந்திய தயாரிப்பினாலான நான்காவது ரோந்துக் கப்பலாகும். இது, கார்டன் ரீச் கப்பல் கட்டுநர்கள் மற்றும் பொறியாளர்கள் நிறுவனத்தால் கட்டப்பட்டது ஆகும். ரோந்து, கடத்தல் மற்றும் வேட்டை எதிர்ப்பு நடவடிக்கைகள், தேடல் மற்றும் மீட்பு ஆகியவற்றிற்கு இந்தக் கப்பல் பயன்படுத்தப்படும்.

---

**5. "பயங்கரவாதத்திற்கு எதிரான ஐநா அறக்கட்டளை நிதியம்" நிறுவப்பட்ட ஆண்டு எது?**

அ) 1945

ஆ) 1992

**இ) 2009 ☑**

ஈ) 2020

2009

✓ பயங்கரவாதத்திற்கு எதிரான ஐநா அறக்கட்டளை நிதியம், கடந்த 2009 ஆம் ஆண்டில் அதன் பொதுச்செயலாளரால் நிறுவப்பட்டது. ஐநா பயங்கரவாதத்திற்கு எதிரான மையம் மற்றும் சிறப்பு திட்டங்கள் & புத்தாக்கக் கிளைமூலம் உறுப்பு நாடுகளுக்கு திறன் மேம்பாட்டு ஆதரவை வழங்க இந்த நிதியம் பயன்படுத்தப்படுகிறது.

✓ பயங்கரவாதத்திற்கு எதிரான ஐநா அறக்கட்டளை நிதியத்துக்கு, இந்தியா, அண்மையில் $500,000 டாலர்களை கூடுதலாக வழங்கியுள்ளது. இதன்மூலம், இந்த நிதியத்துக்கு இந்தியாவின் மொத்த பங்களிப்பு $1.05 மில்லியன் டாலர்களாக ஆகியுள்ளது.

---

**6. இந்தியாவில், 'Women will' என்ற வலைதளத்தை அறிமுகப்படுத்தியுள்ள தொழில்நுட்ப நிறுவனம் எது?**

**அ) கூகிள் ☑**

women will

ஆ) சாம்சங்

இ) மைக்ரோசாப்ட்

ஈ) LG

✓ கூகிள், இந்தியாவில் 'Women will' என்ற ஒரு புதிய வலைதளத்தை அறிமுகப்படுத்தியது.

✓ இத்திட்டம், தொழில்முனைவோராக விரும்பும் பெண்களுக்கு வழிகாட்டுதலை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. கடந்த 2015ஆம் ஆண்டில், 'கூகிள் ஃபார் இந்தியா' நிகழ்வில் தொடங்கப்பட்ட இணைய சாதி முயற்சியை நிறுத்துவதாகவும் கூகிள் அறிவித்துள்ளது. கடந்த ஆறு ஆண்டுகளில், இந்த முயற்சி, கிராமப்புற இந்தியா முழுவதும் 30 மில்லியனுக்கும் அதிகமான பெண்களுக்கு பயிற்சியளித்துள்ளது.

---

**7. உயிரி-பல்வகைமையைக்குறித்து, சமீப செய்திகளில் இடம்பெற்ற "ஆர்ரெதெரியம் சென் – Orretherium tzen" என்றால் என்ன?**

அ) தாவர இனம்



**ஆ) விலங்கினம் ☑**

இ) பறவையினம்

ஈ) பாக்டீரியா

✓ தொன்மாக்கள் காலத்தில் வாழ்ந்த ஒரு பாலூட்டியின் புதைபடிவம் தென் அமெரிக்காவின் சிலியின் படகோனியா பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. '5 பற்களுடைய விலங்கு' என்று பொருள்படும், "ஆர்ரெதெரியம் சென்" என பெயரிடப்பட்ட இது, 72 முதல் 74 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்ததாகக் கூறப்படுகிறது.

✓ இது ஒரு தாவர உண்ணி என்றும், இடையூழியின் முடிவில் தென்னமெரிக்காவில் வாழ்ந்ததாகவும் கூறப்படுகிறது.

---

**8. சமீபசெய்திகளில் இடம்பெற்ற, "அதின்" என்ற பழங்கால நகரம் கண்டுபிடிக்கப்பட்ட நாடு எது?**

அ) இத்தாலி



**ஆ) எகிப்து ☑**

இ) ஆஸ்திரேலியா

ஈ) கிரீஸ்

✓ தொல்பொருள் ஆய்வாளர்கள் குழுவானது அண்மையில் எகிப்தில் ஒரு மிகப்பெரிய பண்டைய நகரத்தைக் கண்டறிந்துள்ளது. இந்த நகரத்திற்கு "தி ரைஸ் ஆப் அதின்" என்று பெயரிடப்பட்டுள்ளது. இது 3,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட நகரம் ஆகும். இது, லக்சரின் மேற்குக்கரையில் மணலடியில் கண்டுபிடிக்கப்பட்டது.

✓ பொ ஆ மு 1391 மற்றும் 1353'க்கு இடையில் எகிப்தை ஆண்ட மூன்றாம் அமன்ஹோடெப் மன்னரின் ஆட்சிக்காலத்தைச் சார்ந்ததாகும் இந்நகரம்.

எகிப்திய சாம்ராஜ்யத்தின் காலத்தில் இந்த நகரம் மிகப்பெரிய நிர்வாக மற்றும் தொழில்துறை குடியேற்றமாக இருந்துள்ளது.

---

**9. சமீபத்தில் வெடிப்புக்குள்ளான லா சோபாரியர் எரிமலை அமைந்–துள்ள நாடு எது?**



அ) பிலிப்பைன்ஸ்

**ஆ) புனித வின்சென்ட் மற்றும் கிரெனடைன்ஸ் ☑**

இ) இந்தோனேசியா

ஈ) ஜப்பான்

✓ கிழக்கு கரீபியன் தீவான புனித வின்சென்ட்டில் அமைந்துள்ள லா சோபா–ரியர் எரிமலை பல்லாண்டுகளாக செயலற்றநிலையிலிருந்து தற்போது வெடித்துச் சிதறியுள்ளது. 1979ஆம் ஆண்டு முதல் செயலற்ற நிலையில் இருந்த இந்த எரிமலை, கடந்த ஆண்டு டிசம்பரில் செயல்படுவதற்கான அறிகுறிகளைக் காட்டியது. வெடித்துச் சிதறியதை அடுத்து அப்பகுதியில் உள்ள மக்களை வெளியேற்றுமாறு அத்தீவின் பிரதமர் உத்தரவிட்டார்.

---

**10. பெருங்கடல்களில் சுற்றுப்புற மனித ஒலிகள் குறைப்பின் தாக்க–த்தை அளவிடுவதை நோக்கமாகக் கொண்ட உலகளாவிய பரிசோ–தனையின் பெயர் என்ன?**

அ) International Human–Ocean Experiment

ஆ) International Ocean Sound Experiment

இ) International Ambient Sound Experiment

**ஈ) International Quiet Ocean Experiment ☑**

✓ சர்வதேச அமைதியான பெருங்கடல் பரிசோதனையானது முதலில் 2011 ஆம் ஆண்டில், வெவ்வேறு பெருங்கடற்புறங்களில் சுற்றுப்புற ஒலியின் அளவீடுகளின் நேர–வரிசையை உருவாக்குவதற்காக உருவாக்கப்பட்–டது. சமீபத்தில், சர்வதேச அமைதியான பெருங்கடல் பரிசோதனையின் அறிவியலாளர்கள் குழு, COVID–19 பொது முடக்கம் காரணமாக பெருங்க–டல்களில், சுற்றுப்புற மனித செயல்பாடுகளின் குறைப்பின் தாக்கத்தைப் புரிந்துகொள்வதற்கும் அளவிடுவதற்கும் சோதனைகளை மேற்கொண்–டுள்ளது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. மைக்ரோசாப்ட் நிறுவனத்துடன் வேளாண் அமைச்சகம் ஒப்பந்தம்**

உழவர்களின் வருவாயை அதிகரிப்பதற்கான மாதிரி திட்டத்தைச் செயல்ப–டுத்துவதற்காக மைக்ரோசாப்ட் நிறுவனத்துடன் மத்திய வேளாண் அமைச்சகம் ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.

விவசாயத்துக்கான உள்ளீட்டுப் பொருள்களுக்கான செலவை குறைத்தும் அறுவடைக்குப்பிறகான செலவைக்குறைத்தும் விவசாயிகளின் வருவா–யை அதிகரிக்கும் வகையிலான மாதிரி திட்டத்தைச்செயல்படுத்த மத்திய அரசு முடிவெடுத்துள்ளது. அதற்காக மைக்ரோசாப்ட் நிறுவனத்துடன் மத்தி–ய வேளாண் அமைச்சகம் ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது. அந்த விழாவில் மத்திய வேளாண்துறை அமைச்சர் நரேந்திர சிங் தோமர் பங்கேற்றார். இந்த மாதிரி திட்டமானது ஆறு மாநிலங்களில் உள்ள 100 கிராமங்களில் ஓராண்டுக்கு செயல்படுத்தப்படவுள்ளது.

---



**கிரசென்ட் உயர்கல்வி நிறுவனத்துக்கு அகில இந்திய அளவில் சிறப்பிடம்**

**தாம்பரம்,ஏப் 14:** அகில இந்திய அளவில் சிறந்த தொழில்நுட்பக் கல்வி நிறுவன வரிசையில் வண்டலூர் பி.எஸ்.அப்துர் ரகுமான் உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் 5–ஆவது இடத்தைப் பெற்றுள்ளது.

டேட்டா கொஸ்ட் ஆங்கில தகவல் தொழில்நுட்பப் பத்திரிகை அகில இந்திய அளவில் சிறந்து விளங்கும் உயர்தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களைத் தரவரிசைப்படுத்தித் தேர்வு செய்துள்ளது.

அகில இந்திய அளவில் அரசு மற்றும் தனியார் உயர்தொழில்நுட்பக்கல்வி நிறுவனத் தர வரிசைப் பட்டியலில் கான்பூர் ஐ.ஐ.டி. முதலிடத்தையும், ஹைதராபாத் ஐ.ஐ.ஐ.டி. 2–ஆம் இடத்தையும், நேதாஜி சுபாஷ் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் 3– ஆவது இடத்தையும், தில்லி இந்திர பிரஸ்தா அறிவியல் தொழில்நுட்பக் கல்லூரி 4–ஆவது இடத்தையும், வண்டலூர் பி.எஸ்.அப்துர் ரகுமான் கிரசென்ட் உயர் கல்வி நிறுவனம் 5–ஆவது இடத்தையும் பெற்றுள்ளன.

அகில இந்திய அளவில் சிறந்த தனியார் உயர்கல்வி நிறுவனத் தர வரிசைப் பட்டியலில் முதலிடத்தையும், தென்னிந்திய அளவிலான அரசு, தனியார் உயர் கல்வி நிறுவனத் தர வரிசைப்பட்டியலில் 2–ஆவது இடத்தையும் பெற்றுள்ளது.

**3. இந்திய கடற்படைக் கப்பல் இலங்கைக்கு நல்லிணக்க பயணம்**

இந்தியா– இலங்கை நாடுகளுக்கிடையிலான நெருக்கமான கடல் மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்பை அதிகரித்துக் கொள்வதற்கான முயற்சிகளின் ஒரு பகுதியாக இந்திய கடற்படைக்குச் சொந்தமான INS ரான்விஜய் நீர்மூழ்கிக்கப்பல், இலங்கைக்கு மூன்று நாள்கள் நல்லிணக்க பயணமாக சென்றடைந்தது. இதுகுறித்து இந்திய தூதரகம் சார்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது: சிங்கள மற்றும் தமிழ்ப்புத்தாண்டின் புனித நிகழ்வான "அவுருடு" தினத்தையொட்டி, இந்திய கடற்படைக் கப்பல் கொழும்புவுக்கு வருவதன் மூலம், இலங்கை மக்களுக்கு ஒற்றுமை, நல்லி–ணக்கத்துக்கான செய்தியைத் தாங்கி வருகிறது.

இந்தியாவும் இலங்கையும் பாரம்பரியமாக ராணுவம் மற்றும் பாதுகாப்பில் நெருக்கமான ஒத்துழைப்பைப் பகிர்ந்து கொண்டுள்ளன. இந்த நாடுகளின் கடற்படைகள் கூட்டுப் பயிற்சி மற்றும் திறன்மேம்பாட்டில் தீவிரமாக ஈடுபட்டு, பரஸ்பரம் ஒத்துழைப்பு வழங்குவதன்மூலம் பல்வேறு நன்மைக–ளைப் பெற்று வருகின்றன. தற்போது இந்தக் கப்பலின் வருகையால் இரு நாடுகளுக்கிடையிலான நட்பில் மேலும் நெருக்கமும், கடல் மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்பை வளர்ப்பதற்கான மற்றொரு படியாகவும் இது விளங்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராஜபுத்திர வம்சத்தினரின் நினைவாக பெயர் சூட்டப்பட்ட இந்தியாவின் ஐந்தாவது நீர்மூழ்கிக்கப்பலான INS ரான்விஜய்யில், ஏவுகணைகளை அழிக்கும் கருவிகளும், உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்ட பிரமோஸ் சூப்பர்சானிக் ஏவுகணையும் பொருத்தப்பட்டுள்ளது.

இந்திய–இலங்கை உடன்படிக்கையின் ஒருபகுதியாக 1987 முதல் 1990 ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு பகுதியில் நடைபெற்ற இலங்கை உள்நாட்டுப் போரில் IPKF பணியாற்றியது குறிப்பிடத்தக்கது.

---

**1.** **சமீபத்தில் AYUSH அமைச்சகத்தால் தொடங்கப்பட்ட, "HCCR" வலைதளத்துடன் தொடர்புடைய துறை எது?**



அ) ஆயுர்வேதம்

ஆ) யுனானி

**இ) ஹோமியோபதி ☑**

ஈ) யோகா

✓ மத்திய ஹோமியோபதி ஆராய்ச்சிக் கவுன்சில் என்பது மத்திய AYUSH அமைச்சகத்தின் கீழ் இயங்கிவரும் ஒரு தன்னாட்சி ஆராய்ச்சி நிறுவனம் ஆகும். இது, சமீபத்தில், உலக ஹோமியோபதி நாளான ஏப்ரல்.10 அன்று ஹோமியோபதி பிணியாளர் களஞ்சிய வலைதளம் என்றவொரு தனித்துவமான டிஜிட்டல் முன்முயற்சியை அறிமுகப்படுத்தியுள்ளது.

✓ ஹோமியோபதி மருத்துவர்கள், ஆராய்ச்சியாளர்கள், மருத்துவ மாணவ –ர்கள் பிணியாளர்களுக்கான சிகிச்சையில் நுழைய ஒரு நிலையான தளத்தை உருவாக்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

**2.** **சமீப செய்திகளில் இடம்பெற்ற, "நவீன பழைமைச் சின்னங்கள் மேலாண்மை அமைப்பு" தொடங்கப்பட்ட மாநிலம் எது?**

அ) தமிழ்நாடு

ஆ) கேரளா

**இ) கோவா ☑**

ஈ) மத்திய பிரதேசம்

✓ கோவாவின் காப்பகங்கள் மற்றும் தொல்பொருள் இயக்குநரகமானது நவீன பழைமைச் சின்னங்கள் மேலாண்மை அமைப்பை (AAMS) திறந்து வைத்தது. பழைமைச் சின்னங்களை சேமித்து வைப்பதற்கான முதல் அமைப்பு இதுவாகும் என்று கூறப்படுகிறது. AAMS என்பது ஒரு மென்பொருளால் இயக்கப்படும் தானியங்கி சேமிப்பகமாகும். இது, பல்வேறு பொருட்களின் சேமிப்பிற்கு பயன்படுத்தப்படுகிறது.

✓ இந்த அமைப்பு ஒரு தொல்பொருள்பற்றிய தகவல்களை வழங்குவதோடு மட்டுமல்லாமல் அவற்றின் பாதுகாப்பையும் உறுதிசெய்கிறது.

---

**3.** **நிதியமைச்சகத்தின் அண்மைய அறிவிப்பின்படி, கீழ்காணும் எந்நிறுவனத்தில், அடிப்படை சேமிப்பு வங்கிக்கணக்கைத் தொடங்க முடியும்?**

அ) கட்டணஞ்செலுத்து வங்கி

ஆ) அயல்நாட்டு வங்கி

**இ) அஞ்சல் அலுவலகம் ☑**

ஈ) சிறு நிதி வங்கி

✓ 2019ஆம் ஆண்டு அஞ்சல் அலுவலக சேமிப்பு கணக்குத் திட்டத்தில் நிதி அமைச்சகம் மாற்றங்களை அறிவித்துள்ளது. அறிவிப்பின்படி, அரசு நலத் திட்டத்தின் பயனாளி, ஓர் அஞ்சல் அலுவலகத்துடன் அடிப்படை சேமிப்பு வங்கி கணக்கைத் தொடங்க முடியும். இந்த அறிவிப்பின்படி, அத்தகைய கணக்கைத் தொடங்க குறைந்தபட்ச வைப்பிருக்க வேண்டிய அவசியம் இல்லை. குறைந்தபட்ச இருப்பை பராமரிக்க வேண்டிய அவசியமுமில் –லை. சேமிப்புக்கணக்கில் நிலுவைத்தொகையை பராமரிக்காததற்கா –ன கட்டணத்தையும் அமைச்சகம் குறைத்துள்ளது.

---

**4.** **நாட்டிலேயே முதன்முறையாக 'பசுமை பத்திரங்களை' வெளியி –ட்ட மாநகராட்சி எது?**

அ) சென்னை

ஆ) கிரேட்டர் நொய்டா

**இ) காசியாபாத் ☑**

ஈ) ஆமதாபாத்

✓ இந்தியாவிலேயே முதன்முறையாக பசுமை பத்திரங்களை காசியாபாத் மாநகராட்சி வழங்கியுள்ளது. காசியாபாத் மாநகராட்சியானது இப்பசுமை பத்திரத்தின்மூலம் ₹150 கோடி நிதி திரட்டியுள்ளது. இந்தப் பத்திரத்தின் மூலம் பெறப்பட்ட வருமானம், நகரத்தில், மூன்றாம்நிலை நீர் சுத்திகரிப்பு உட்கட்டமைப்பை உருவாக்க பயன்படுத்தப்படுகிறது. இந்தப்பத்திரங்கள் சமீபத்தில் BSE இல் பட்டியலிடப்பட்டுள்ளன.

---

**5.** **'வேளாண் ஹாக்கத்தானுக்காக AI'ஐ நடத்துவதற்காக ஹிந்துஸ் –தான் யூனிலீவர் மற்றும் கூகிள் நிறுவனத்துடன் ஒத்துழைத்துள்ள அமைப்பு எது?**

அ) UNESCO

ஆ) NITI ஆயோக்

இ) AIM

**ஈ) மைகௌ இந்தியா ☑**

✓ ஹிந்துஸ்தான் யூனிலீவர், கூகிள் மற்றும் மைகௌ இந்தியா ஆகியவை இணைந்து வேளாண் துறையில் ஒரு ஹாக்கத்தானை நடத்துவதற்காக ஒத்துழைத்துள்ளன. விவசாயத்தில் நீர் பாதுகாப்பிற்கான புதுமையான தீர்வுகளைக்கண்டறிவதற்கும், உழவர்களுக்கு நிலையான தீர்வுகளை வடிவமைப்பதில் துளிர்நிறுவனங்களை உருவாக்குவதற்காகவுமாக இம்மூன்று நிறுவனங்கள் ஒன்றிணைந்துள்ளன.

---

**6.** **18 வயதிற்கு மேற்பட்ட அனைவரும் தங்களுக்கு விருப்பமான மதத்தைத் தேர்வு செய்ய சுதந்திரம் இருப்பதாக சமீபத்தில் கூறிய அரசியலமைப்பு ரீதியான அமைப்பு எது?**



அ) தேசிய மனிதவுரிமைகள் ஆணையம்

ஆ) தேசிய நிர்வாக தீர்ப்பாயம்

**இ) இந்திய உச்சநீதிமன்றம் ☑**

ஈ) பிற்படுத்தப்பட்டோருக்கான தேசிய ஆணையம்

✓ இந்திய அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள "பரப்புரை" என்ற சொல் 18 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் தங்களுக்கு விருப்பமான மதத்தை சுதந்திரமாக தேர்வுசெய்வதற்கு அனுமதிக்கிறது என்று உச்சநீதிமன்றம் சமீபத்தில் கூறியது. மேற்கூறியவற்றை மேற்கோள் காட்டி, இந்தியாவில் மோசடியான மதமாற்றங்களை தடுப்பதற்கு நீதிமன்ற தலையீட்டைக் கோரிய பொதுநல வழக்கை உச்சநீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

---

**7.** **இணையவழி தகராறு தீர்வுக்கான ஒரு கையேட்டை வெளியிட –வுள்ள நிறுவனம் எது?**

அ) SEBI

ஆ) RBI

**இ) NITI ஆயோக் ☑**

ஈ) IRDAI

✓ இந்திய அரசாங்கத்தின் மதியுரையகமான NITI ஆயோக், இணையவழி தகராறு தீர்வுக்கான ஒரு கையேட்டை வெளியிட திட்டமிட்டுள்ளது. இந்தக்கையேடு, இந்தியாவில், இணையவழி தகராறு தீர்வை வணிக நிறுவனங்களின் தலைவர்கள் பின்பற்றுவதற்கான ஓர் அழைப்பிதழாக அமையும். அகாமி மற்றும் ஓமிடியார் நெட்வொர்க் இந்தியா, ICICI வங்கி, பொதுமக்களுக்கான அசோகா கண்டுபிடிப்பாளர்கள் போன்ற அமைப்புக –ளுடன் இணைந்து இந்தக் கையேடு வெளியிடப்படும்.

---

**8.** **ஜூலியஸ் பேயர் வாழ்க்கை முறைக் குறியீட்டின்படி, உலகில் வாழ்வதற்கு அதிகம் செலவு பிடிக்கும் இடம் எது?**

அ) மும்பை

**ஆ) ஷாங்காய் ☑**

இ) மெல்பர்ன்

ஈ) மாஸ்கோ

✓ 2028ஆம் ஆண்டுக்குள் சீனா உலகின் மிகப்பெரிய பொருளாதாரமாக மாறவுள்ளது. மேலும் அதன் வணிக தலைநகரான ஷாங்காய் உலகின் வாழ்வதற்கு அதிகம் செலவு பிடிக்கும் இடமாக மாறியுள்ளது. சமீபத்தில் வெளியிடப்பட்ட ஜூலியஸ் பேயர் வாழ்க்கை முறைக் குறியீட்டின்படி, சீனாவின் ஷாங்காய் உலகின் வாழ்வதற்கு அதிகம் செலவு பிடிக்கும் நகரமாகும். இந்தப் பட்டியலில், ஷாங்காயைத் தொடர்ந்து டோக்கியோ மற்றும் ஹாங்காங் ஆகிய நகரங்கள் 2 & 3ஆவது இடத்தில் உள்ளன.

---

**9. அண்மையில் ஹெலிகாப்டர் விபத்தில் இறந்த ஆலிவர் டசால்ட் என்பவர், எந்த நாட்டின் அரசியல்வாதியும் கோடீஸ்வரருமாவார்?**

அ) பிலிப்பைன்ஸ்

**ஆ) பிரான்ஸ் ☑**

இ) இந்தோனேசியா

ஈ) ஜப்பான்



✓ பிரெஞ்சு கோடீஸ்வர அரசியல்வாதி ஆலிவர் டசால்ட் அண்மையில் வட மேற்கு பிரான்சில் ஏற்பட்ட ஹெலிகாப்டர் விபத்தில் காலமானார். அவர், பிரான்ஸின் தேசிய சட்டமன்ற உறுப்பினராகவும் இருந்தார். அவர் டசால் –ட் வானூர்தி தயாரிக்கும் குடும்பத்தின் வாரிசாவார். 'டசால்ட்' என்பது ஒரு முன்னணி பிரெஞ்சு வானூர்தி உற்பத்தி நிறுவனமாகும். அவர், உலகின் 361ஆவது பணக்காரர் என்று மதிப்பிடப்பட்டுள்ளார்.

---

**10. இந்தியாவின் முதல் உலக திறன் மையத்தை (World Skill Centre) திறந்துள்ள மாநில அரசு எது?**

**அ) ஒடிஸா ☑**

ஆ) மத்திய பிரதேசம்

இ) இராஜஸ்தான்

ஈ) நாகாலாந்து



✓ ஒடிஸா மாநில முதலமைச்சர் நவீன் பட்நாயக் சமீபத்தில் மஞ்சேஸ்வரில் உலக திறன் மையத்தை (WSC) திறந்துவைத்தார். இந்தியாவின் முதல் திறன் மையமான WSC, ஒடிஸா திறன்மேம்பாட்டு திட்டத்தின்கீழ் ஆசிய வளர்ச்சி வங்கியின் ஆதரவுடன் ₹1,342 கோடி செலவில் உருவாக்கப்பட் –டுள்ளது. இது, மாநிலத்தில் உள்ள இளைஞர்களுக்கு மேம்பட்ட மற்றும் வேலைவாய்ப்புக்கு உதவக்கூடிய திறன்களை வழங்குவதை நோக்க –மாகக் கொண்டுள்ளது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. 'ககன்யான்' திட்டம்: இந்தியா–பிரான்ஸ் ஒப்பந்தம்**

மனிதர்களை விண்வெளிக்கு அனுப்பும் ISRO'இன் 'ககன்யான்' திட்டத்தில் ஒருங்கிணைந்து செயல்படுவதற்காக இந்தியா–பிரான்ஸ் இடையே ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்திய மண்ணிலிருந்து மனிதர்களை முதன்முதலாக விண்வெளிக்கு அனுப்புவதற்கான பணிகளை இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் (ISRO) மேற்கொண்டு வருகிறது.

நாடு சுதந்திரமடைந்த 75ஆவது ஆண்டான 2022'இல் இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால், COVID–19 நோய்த் தொற்றுப்பரவல் காரணமாக ஏற்பட்ட இடையூறுகளால் இந்தத் திட்டத்தின் பணிகள் தாமதமடைந்துள்ளன. இந்நிலையில், 'ககன்யான்' திட்டத்தில் இந்தியாவும் பிரான்ஸும் ஒத்துழைப்புடன் செயல்படுவதற்கான ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது. பிரான்ஸ் வெளியுறவு அமைச்சர் ஜான் ஈவ் லெடிரியன், ISRO தலைவர் சிவன் ஆகியோர் முன்னிலையில் இந்த ஒப்பந்தம் கையெழுத்தானது.

அதன்படி, இந்திய விண்வெளி வீரர்களுக்கு பிரான்ஸில் பயிற்சியளிக்கப்ப –டவுள்ளது. 'ககன்யான்' திட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்கான அமைப்பில் பணிபுரிபவர்களும் பிரான்ஸில் பயிற்சிபெறவுள்ளனர். திட்டம் தொடர்பான தகவல்களைப் பரிமாறிக்கொள்ளவும், விண்வெளி வீரர்களுக்கான உண –வு உள்ளிட்டவற்றைத் தயார் செய்வதில் ஒத்துழைப்பு அளிக்கவும் இந்த ஒப்பந்தம் வழிவகுக்கிறது.

**கருவிகளைப் பயன்படுத்த அனுமதி:** பிரான்ஸ் விண்வெளி ஆய்வு மையத்தில் உள்ள கருவிகள் உள்ளிட்டவற்றை இந்திய விண்வெளி வீரர் –கள் பயன்படுத்திக் கொள்ளவும் ஒப்பந்தம் வழிவகுக்கிறது. பன்னாட்டு விண்வெளி நிலையத்தில் பிரான்ஸ் சார்பில் பொருத்தப்பட்டுள்ள கருவிகளை இந்திய வீரர்கள் பயன்படுத்திக்கொள்ளவும் வாய்ப்பு ஏற்பட்டு –ள்ளது. பல்வேறு பாதுகாப்புக் கருவிகளும் இந்திய வீரர்களுக்கு வழங்கப் –படவுள்ளன. விண்வெளி வீரர்கள் பயிற்சிமேற்கொள்வதற்கான சிறப்பு மையத்தை பெங்களூரில் கட்டமைக்க பிரான்ஸ் உதவி செய்யவுள்ளது.

---

**2. இந்திய விமானப் படை தளபதிகள் மாநாடு தொடக்கம்**

இந்திய விமானப்படை தளபதிகள் பங்கேற்கும் மூன்று நாள் மாநாடு ஏப்.15 அன்று தொடங்கியது. நாட்டில் நிலவும் பாதுகாப்பு சூழல் குறித்து இந்த மாநாட்டின்போது ஆய்வு செய்யப்படவுள்ளது. விமானப்படை தளபதிகளின் மாநாடு ஆண்டுக்கு இருமுறை நடைபெறுவது வழக்கம். நடப்பாண்டின் முதலாவது மாநாடு தில்லியில் உள்ள விமானப்படை தலைமையகத்தில் தொடங்கியது. அந்த மாநாட்டை பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தொடக்கிவைத்தார்.

மாநாட்டின்போது, கிழக்கு லடாக் உள்ளிட்ட பகுதிகளில் காணப்படும் பாதுகாப்பு சூழல் குறித்து ஆய்வுமேற்கொள்ளப்பட்டது. எதிர்கால சவால்க –ளை எதிர்கொள்ளும் வகையில் இந்திய வான்படையின் செயல்திறனை மேம்படுத்துவது உள்ளிட்டவை தொடர்பாகவும் ஆலோசிக்கப்படவுள்ளது. விமானப்படையைச் சேர்ந்த தளபதிகளும், முக்கிய அதிகாரிகளும் இந்த மாநாட்டில் கலந்துகொண்டனர்.

---

**3. எந்தவித அழுத்தத்துக்கும் இந்தியா பணிந்துவிடாது: கிழக்கு லடாக் விவகாரம் குறித்து விபின் ராவத் கருத்து**

"இந்தியா எந்தவித அழுத்தத்துக்கும் பணிந்துவிடாது" என சீனாவுடனான கிழக்கு லடாக் மோதல் போக்கு குறித்து முப்படைத் தளபதி விபின் ராவத் கூறினார். மத்திய வெளியுறவு அமைச்சகத்துடன் அப்சர்வர் ரிசர்ச் பவுண் –டேஷன் என்ற அமைப்பு இணைந்து பன்னாட்டு அரசியல் மற்றும் பொரு –ளாதாரம் குறித்த 'ரெய்சினா பேச்சுவார்த்தை' என்ற மாநாட்டை கடந்த 13 முதல் 16ஆம் தேதி வரை நடத்தி வருகிறது. இதில் காணொலி வழியில் பங்கேற்ற விபின் ராவத் பேசியதாவது:

சீனா தனது இராணுவபலம் மற்றும் மேம்பட்ட தொழில்நுட்பம்மூலமாக பிற நாடுகளுக்கு அழுத்தம் கொடுத்து, தனது விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்ளலாம் என்று எண்ணுகிறது. ஆனால், வடக்கு எல்லை விவகாரத்தி –ல் இந்தியா உறுதிப்பாட்டுடன் உள்ளது. எந்தவித அழுத்தத்துக்கும் இந்தியா பணிந்துவிடாது. வடக்கு எல்லையில் இப்போது கடைப்படிக்கப்ப –டும் நிலைப்பாட்டை மாற்ற முயற்சிப்பதை தடுப்பதில் உறுதியுடன் இருப்ப –தன்மூலம், பன்னாட்டு சமூகத்தின் ஆதரவையும் இந்தியா பெற முடியும். ஏனெனில், எல்லை நிலைப்பாட்டை கடைப்படிப்பது தொடர்பாக சர்வதேச சட்ட நடைமுறைகள் உள்ளன. அதை ஒவ்வொரு நாடும் பின்பற்றியாக வேண்டும்" என்றார் அவர்.

மேலும், ராணுவத்தை நவீனமயமாக்குதல் குறித்துப் பேசிய விபின் ராவத், அமெரிக்காவின் F35 போர் விமானம் நவீன தொழில்நுட்பங்களுடன் வடிவமைக்கப்பட்டிருப்பது குறித்து விவரித்தார். அதே நேரம், இந்த F35 போர் விமானம் தயாரிப்பு தொழில்நுட்பத்தை அமெரிக்கா இந்தியாவுடன் பகிர்ந்துகொள்ளும் என்பதை உறுதியுடன் கூறமுடியாது. F35 விமானத் –தைவிட குறைந்த தொழில்நுட்பத்துடன் கூடிய 'F' இரக போர் விமான தொழில்நுட்பத்தை மட்டுமே இந்தியாவுடன் இப்போது பகிர்ந்துகொள்ள அமெரிக்கா முன்வந்துள்ளது என்றும் அவர் கூறினார்.

---

**4. அமெரிக்காவில் இணை அரசு வழக்குரைஞர் பதவியில் இந்திய–அமெரிக்க பெண் நியமனத்துக்கு அங்கீகாரம்: செனட் சபையில் வாக்கெடுப்பு**

அமெரிக்க நீதித்துறையில் இணை அரசு வழக்குரைஞர் பதவிக்கு நியமிக் –கப்பட்டிருக்கும் இந்திய–அமெரிக்க பெண் வழக்குரைஞர் வனிதா குப்தா –வின் நியமனத்துக்கு ஒப்புதல் அளிப்பதற்கான வாக்கெடுப்பு அமெரிக்க செனட் சபையில் நடைபெற உள்ளது. இதில் அவருடைய நியமனம் உறுதி செய்யப்பட்டால், அமெரிக்க நீதித்துறையில் சக்திவாய்ந்த மூன்றாவது நிலை அதிகாரியாக நியமிக்கப்படும் வெள்ளையரல்லாத முதல் பெண் என்ற பெருமையை வனிதா குப்தா (46) பெறுவார்.

அமெரிக்க அதிபர் தேர்தலில் வெற்றிபெற்ற ஜோ பைடன், இந்திய வம்சாவ –ளியைச் சேர்ந்த வனிதா குப்தாவை, இணை அரசு வழக்குரைஞர் பதவிக்கு நியமித்தார். அவருடைய நியமனத்துக்கு அங்கீகாரம் பெறும் வகையில், செனட் சபையில் நீதிக்குழுவில் கடந்த மார்ச் 25 அன்று நடந்த வாக்கெடுப்பில் பெரும்பான்மை பெற்றதன்மூலம், அவருடைய நியமனம் செனட் சபைக்கு பரிந்துரைக்கப்பட்டது. செனட் பெரும்பான்மை தலைவர் சுக் ஸ்கூமர் அவருடைய பெயரை செனட் சபை வாக்கெடுப்புக்கு அறிமுகம் செய்தார்.

---

### 5. தனியார்மயமாக்கப்படும் வங்கிகள்: நிதித்துறை அமைச்சகத்துடன் NITI ஆயோக் ஆலோசனை

நடப்பு நிதியாண்டில் தனியார்மயமாக்கப்படவுள்ள இரு பொதுத்துறை வங்கிகளின் பெயர்களை இறுதி செய்வதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசின் கொள்கை வகுக்கும் குழுவான NITI ஆயோக் தொடங்கியு–ள்ளது. இதுதொடர்பாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தது:

2021–22ஆம் ஆண்டு மத்திய நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டபடி இரு பொதுத்துறை வங்கிகள், ஒரு பொதுத்துறை காப்பீட்டு நிறுவனம் ஆகியவை தனியார்மயமாக்கப்படவுள்ளன. இந்த வங்கிகள், காப்பீட்டு நிறு–வனத்தை தேர்வுசெய்வது தொடர்பாக நிதித்துறை அமைச்சகத்துடன் NITI ஆயோக் ஆலோசித்து வருகிறது. இதுதொடர்பாக இறுதி முடிவுக்கு வருவதற்கு முன்னர் சட்ட விதிமுறைகள், பணியாளர் நிர்வாகம், நிதி நிலைமை உள்ளிட்ட அம்சங்களை ஆராய வேண்டியுள்ளது. இதற்காக சில கூட்டங்களையும் NITI ஆயோக் நடத்தியுள்ளது.

NITI ஆயோக் தனது பரிந்துரைகளைத் தெரிவித்ததும், அதுகுறித்து பங்கு விலக்கல் தொடர்பான செயலர்கள் குழு ஆய்வு செய்யும். செயலர்கள் குழுவின் முடிவுக்குப்பின்னர், இறுதி செய்யப்பட்ட பெயர்கள் இறுதி ஒப்புதலுக்காக பிரதமர் தலைமையிலான அமைச்சர் குழுவுக்கு அனுப்பி வைக்கப்படும். அமைச்சர்கள் குழு மற்றும் மத்திய அமைச்சரவையின் அனுமதிக்குப் பின்னர் தனியார்மயமாக்கல் நடவடிக்கை தொடங்கும் என அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. 'தனியார்மயமாக்கப்படும் வங்கிகளில் பணியாற்றும் ஊழியர்களின் நலன்கள் பாதுகாக்கப்படும்' என மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் கடந்த மாதம் தெரிவித்திருந்தார்.

இரு பொதுத்துறை வங்கிகள், ஒரு காப்பீட்டு நிறுவனத்தில் பங்கு விலக்க–ல் நடவடிக்கைமூலமாக நடப்பு நிதியாண்டில் ₹1.75 லட்சம் கோடி திரட்ட அரசு திட்டமிட்டுள்ளது.

---

### 6. ஆசிய மல்யுத்தம்: சரிதாவுக்கு தங்கம்

ஆசிய மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவின் சரிதா தொடர்ந்து 2ஆவது முறையாக தங்கம் வென்றார். கஜகஸ்தானின் அல்மேட்டி நகரில் நடைபெற்று வரும் இப்போட்டியில் 59 கிலோ எடைப்பிரிவில் பங்கேற்ற இந்திய வீராங்கனை சரிதா, தனது முதல் சுற்றில் 4–5 என்ற கணக்கில் மங்கோலிய வீராங்கனை ஷூவ்தர் பாட்டர்ஜாவிடம் தோல்விகண்டார். எனினும், மறுவாய்ப்பை (ரெபிசேஜ் ரவுண்டு) சரியாகப் பயன்படுத்திக் கொண்ட சரிதா, அபாரமாக ஆடி அரையிறுதிக்கு முன்னேறினார். சரிதா தனது அரையிறுதியில் கிர்கிஸ்தானின் நுராய்டா அனார்குலோவாவை வீழ்த்தி இறுதிச்சுற்றுக்கு முன்னேறினார்.

பின்னர் நடைபெற்ற இறுதிச்சுற்றில் சரிதா 10–7 என்ற கணக்கில் மங்கோ–லிய வீராங்கனை ஷூவ்தர் பாட்டர்ஜாவை வீழ்த்தினார். இதன்மூலம் முதல் சுற்றில் அவரிடம் கண்ட தோல்விக்கு பதிலடி கொடுத்ததோடு, சாம்பியன் பட்டத்தையும் தக்கவைத்துக் கொண்டார் சரிதா. மகளிர் 50 கிகி எடைப்பிரிவில் பங்கேற்ற இந்தியாவின் சீமா வெண்கலம் வென்றார். அவர் வெண்கலப்பதக்கத்துக்கான ஆட்டத்தில் தைபேவின் யங் ஷன் லின்னை வீழ்த்தினார்.

மகளிர் 76 கிலோ எடைப்பிரிவில் பங்கேற்ற இந்திய வீராங்கனை பூஜா, வெண்கலப் பதக்கத்துக்கான ஆட்டத்தில் 2–0 என்ற கணக்கில் தென் கொரியாவின் சியோன் ஜியோங்கை வீழ்த்தினார்.

---

### 7.2010'களின் தலைசிறந்த ஒருநாள் கிரிக்கெட் வீரர் கோலி: விஸ்டன் இதழ் கௌரவம்

2010'களின் தலைசிறந்த ஒருநாள் கிரிக்கெட் வீரராக இந்திய கேப்டன் விராட் கோலியை தேர்வு செய்துள்ளது விஸ்டன் இதழ். 'கிரிக்கெட்டின் பைபிள்' என்று வர்ணிக்கப்படும் விஸ்டன் வருடாந்திர இதழானது ஆண்டுதோறும் தலைசிறந்த கிரிக்கெட் வீரர்கள் அடங்கிய பதிப்பை வெளியிட்டு வருகிறது. இந்த நிலையில் ஒருநாள் கிரிக்கெட் போட்டி அறிமுகப்படுத்தப்பட்டு 50 ஆண்டுகள் நிறைவடைந்ததையொட்டி 1971 முதல் 2021 வரையிலான காலங்களில் ஒவ்வொரு பத்தாண்டுகளிலும் தலைசிறந்த ஒருநாள் கிரிக்கெட் வீரர்களாக திகழ்ந்தவர்களின் பட்டியலை வெளியிட்டுள்ளது.

அதன்படி, 1970'களின் சிறந்த வீரராக மேற்கிந்தியத் தீவுகளின் முன்னாள் கேப்டன் விவியன் ரிச்சர்ட்ஸையும், 1980'களின் தலைசிறந்த வீரராக முன்னாள் இந்திய கேப்டன் கபில்தேவையும், 1990'களின் தலைசிறந்த வீரராக சச்சின் டெண்டுல்கரையும், 2000'களின் சிறந்த வீரராக லங்கையின் முன்னாள் சுழற்பந்துவீச்சாளர் முத்தையா முரளீதரனையும், 2010'களின் சிறந்த வீரராக தற்போதைய இந்திய கேப்டனான விராட் கோலியையும் தேர்வு செய்துள்ளது விஸ்டன் இதழ்.

2008'இல் சர்வதேச கிரிக்கெட்டில் அறிமுகமான விராட் கோலி, இதுவரை 254 ஒருநாள் போட்டிகளில் விளையாடி 12,169 ரன்கள் குவித்துள்ளார். இதுதவிர, 2011'இல் உலகக்கோப்பையை வென்ற இந்திய அணியிலும் கோலி இடம்பெற்றிருந்தார். கடந்த 10 ஆண்டுகளில் மட்டும் கோலி 42 சதங்களுடன் 11 ஆயிரத்துக்கும் அதிகமான ரன்களை குவித்துள்ளார்.

அதேநேரத்தில் உலகின் தற்போதைய முன்னணி கிரிக்கெட் வீரராக இங்கிலாந்து ஆல்ரவுண்டர் பென் ஸ்டோக்ஸை தேர்வு செய்துள்ளது விஸ்டன் இதழ். அவர் தொடர்ந்து 2ஆவது ஆண்டாக இந்த விருதைப் பெற்றுள்ளார். பென் ஸ்டோக்ஸ் கடந்த சீசனில் டெஸ்ட் போட்டியில் 641 ரன்களை குவித்துள்ளதோடு, 19 விக்கெட்டுகளையும் கைப்பற்றியுள்ளார்.

---

### 8. இந்தியாவில் வங்கிச் சேவையிலிருந்து வெளியேறுகிறது சிட்டிபேங்க்

அமெரிக்காவைச் சேர்ந்த சிட்டிபேங்க் இந்தியாவில் நுகர்வோர் வங்கிச் சேவையிலிருந்து வெளியேறவுள்ளதாக அறிவித்துள்ளது. சிட்டிபேங்க், இந்தியாவில் கடனட்டை, சில்லறை வங்கியியல், வீட்டுக்கடன் மற்றும் சொத்து மேலாண்மை உள்ளிட்ட வர்த்தக பிரிவுகளில் ஈடுபட்டு வருகிறது. இந்த வங்கிக்கு இந்தியாவில் 35 கிளைகள் உள்ளன. ஏறக்குறைய 4,000 பணியாளர்கள் சிட்டிபேங்கின் நுகர்வோர் வங்கிச் சேவையில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில், எதிர்பார்த்த வளர்ச்சியை எட்ட இயலாததன் காரணமாக, 13 நாடுகளில் நுகர்வோர் வங்கிச்சேவையிலிருந்து வெளியேற சிட்டிபேங்கின் சர்வதேச தலைமைச் செயல் அதிகாரி ஜான் பிரேஸர் முடிவெடுத்துள்ளதாக அந்த வங்கி தெரிவித்துள்ளது.

---

### 9. நாட்டின் ஏற்றுமதி 60% அதிகரிப்பு

நாட்டின் ஏற்றுமதி சென்ற மார்ச் மாதத்தில் 60% வளர்ச்சியடைந்துள்ளது என மத்திய அரசு வெளியிட்ட புள்ளிவிவரத்தில் தெரிவித்துள்ளது. இது குறித்து மத்திய அரசு புள்ளிவிவரத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது: நாட்டின் ஏற்றுமதி கடந்த மார்ச் மாதத்தில் 60.29 சதவீதம் வளர்ச்சி கண்டு 3,445 கோடி டாலரை எட்டியது. இருப்பினும், கடந்த 2020–21ஆம் முழு நிதியாண்டில் இந்தியாவின் ஏற்றுமதியானது 7.26% பின்னடைவைக் கண்டு 29,063 கோடி டாலராக சரிந்துள்ளது.

கடந்த மார்ச் மாதத்தில் இறக்குமதி 53.74% அதிகரித்து 4,838 கோடி டாலராக காணப்பட்டது. அதேசமயம், 2020–21 ஏப்ரல்–மார்ச் வரையிலான காலத்தில் இறக்குமதியானது 18% குறைந்து 38,918 கோடி டாலராக இருந்தது. நடப்பாண்டு மார்ச்சில் வர்த்தக பற்றாக்குறை கடந்தாண்டுடன் ஒப்பிடுகையில் 998 கோடி டாலரிலிருந்து 1,393 கோடி டாலராக உயர்ந்து உள்ளது. கடந்த முழு நிதியாண்டில் வர்த்தக பற்றாக்குறையானது 16,135 கோடி டாலரிலிருந்து 9,856 கோடி டாலராக குறைந்துள்ளது.

நடப்பாண்டு மார்ச்சில் பிண்ணாக்கு (230.4%), இரும்புத்தாது (194.89%), சணல் (105.26%), மின்னணுப் பொருள்கள் (91.98%), தரைவிரிப்புகள் (89.84%), நவரத்தினங்கள்–ஆபரணங்கள் (78.93%), பொறியியல் சாதனங்கள் (71.3%), அரிசி (66.77%), நறுமணப்பொருள்கள் (60.42%), இறைச்சி, பால் பொருள்கள் (52.79%) உள்ளிட்ட பொருள்களின் ஏற்றுமதி கணிசமான ஏற்றத்தைச் சந்தித்தன. அதேசமயம், எண்ணெய்வித்துகள் (–6.45%), முந்திரி (–1.99%) ஆகியவற்றின் ஏற்றுமதி வீழ்ச்சியடைந்தன.

இறக்குமதியைப் பொருத்தவரையில், வெள்ளி, போக்குவரத்து உபகரணங்–கள், பருப்பு வகைகள் மற்றும் உரங்கள் ஆகிய துறைகள் எதிர்மறை வளர்ச்சியை பதிவுசெய்துள்ளன. மார்ச்சில் கச்சா எண்ணெய் இறக்குமதி 2.23% அதிகரித்து 1,027 கோடி டாலராக இருந்தது. கடந்த நிதியாண்டில் இதன் இறக்குமதி 36.92% குறைந்து 8,235 கோடி டாலராக இருந்தது. அதேபோன்று, தங்கம் இறக்குமதியும் மார்ச்சில் 122 கோடி டாலரிலிருந்து 849 கோடி டாலராக அதிகரித்துள்ளதாக மத்திய அரசு புள்ளிவிவரத்தில் தெரிவித்துள்ளது.

---

### 10. வானில் பறக்கும் இ–டாக்ஸி சென்னை IIT வடிவமைப்பு: ஜூலையில் சோதனை ஓட்டம்

மின்கலத்தில் இயங்கக்கூடிய பறக்கும் இ–டாக்ஸியை சென்னை IIT வடிவமைத்துள்ளது. போக்குவரத்து நெரிசலை குறைக்கும் வகையில், பறக்கும் டாக்ஸியை வடிவமைக்க சென்னை IIT திட்டமிட்டது. அதற்காக 'தி இ–பிளேன் கம்பெனி' என்ற புதிய நிறுவனத்தை கடந்த ஆண்டு

நிறுவியது. இந்நிலையில், மின்கலம்மூலம் இயங்கும் பறக்கும் இ–டாக்ஸி –யை IIT வடிவமைத்துள்ளது.

இதில் இரண்டு பேர் பயணிக்க முடியும். இந்த இ–டாக்ஸி சுமார் 200 கிகி அளவிலான எடையை சுமந்தபடி மணிக்கு 200 கிமீ வேகத்தில் பறக்கும். இ–டாக்ஸி சோதனை ஓட்டம் வரும் ஜூலையில் நடக்கவுள்ளது. அதைத் தொடர்ந்து 2022ஆம் ஆண்டில் முழு வடிவம் பெற்று பயணிகளை ஏற்றிச் செல்லதயாராகிவிடும். இது நடைமுறைக்கு வரும்போது, வழக்கமான கால் டாக்ஸியைவிட 2 மடங்கு மட்டுமே வாடகை அதிகம் இருக்கும்.

**1. "வரலாற்றுச்சார்பான நீலிஸ்டுகள்" மேற்கொண்ட இணையவழி அவதூறுகளைப் புகாரளிப்பதற்காக தொலைபேசி எண்ணை அறிமு-கப்படுத்தியுள்ள நாடு எது?**

அ) வட கொரியா



**ஆ) சீனா ☑**

இ) பிரேஸில்


ஈ) கியூபா

✓ "வரலாற்றுச் சார்புடைய நீலிசம்" என்பது சீனாவில் பயன்படுத்தப்படும் ஒரு சொற்றொடராகும். அது, சீன பொதுவுடைமை கட்சியின் கடந்த கால நிகழ்வுகளின் விளக்கத்தின் மீதான பொதுமக்களின் ஐயத்தை விவரிக்-கிறது. அண்மையில், சீனாவின் இணையவெளி ஒழுங்காற்று அமைப்பு ஆளும் பொதுவுடைமை கட்சியையும் அதன் வரலாற்றையும் இழிவுபடுத்-தும் இணையவெளி அவதூறுகளைப் புகாரளிப்பதற்காக ஒரு தொலை பேசி எண்ணை அறிமுகப்படுத்தியது. அக்கட்சியின் நூறாவது ஆண்டு விழா இவ்வாண்டு ஜூலை மாதம் வருகிறது.

---

**2. பிரிட்டிஷ் திரைப்பட மற்றும் தொலைக்காட்சிக் கலைகள் அகாடமி (BAFTA)'இன் 'சிறந்த திரைப்பட' விருதை வென்ற படம் எது?**

**அ) நோமட்லேண்ட் ☑**



ஆ) சோல்

இ) அனதர் ரவுண்ட்

ஈ) ஜூடாஸ்

✓ "நோமட்லேண்ட்", பிரிட்டிஷ் திரைப்பட & தொலைக்காட்சிக் கலைகள் அகாடமியான BAFTA'இன் சிறந்த திரைப்படத்திற்கான விருது உட்பட 4 பரிசுகளை வென்றது. சோலி ஜாவோ, "நோமட்லேண்ட்" திரைப்படத்-திற்கான சிறந்த இயக்குநருக்கான BAFTA'இன் விருதினை வென்ற இரண்டாவது பெண்மணி ஆனார். சிறந்த நடிகருக்கான விருது 83 வயதான அந்தோனி ஹாப்கின்ஸுக்கும், சிறந்த நடிகைக்கான விருது பிரான்சிஸ் மெக்டார்மண்டிற்கும் வழங்கப்பட்டது.

---

**3. இந்திய வல்லுநர்கள் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட COVID-19 தடுப்பூசியான ஸ்புட்னிக்-வி, எந்த நாட்டுடையதாகும்?**

அ) சீனா

**ஆ) ரஷியா ☑**

இ) ஜெர்மனி

ஈ) ஐக்கிய அமெரிக்க நாடுகள்

✓ இந்தியாவில் ரஷியாவின் ஸ்புட்னிக்-வி தடுப்பூசியை அவசரமாக பயன்-படுத்த வல்லுநர்கள் குழு பரிந்துரைத்தது. இந்தியாவில் 'ஸ்புட்னிக்-வி' கரோனா தடுப்பூசியின் அவசரகால பயன்பாட்டுக்கு இந்திய மருந்துப் பொருள்கள் கட்டுப்பாட்டு இயக்குநரகம் ஒப்புதல் வழங்கியுள்ளது.

✓ மற்ற இரண்டு தடுப்பூசிகள் சீரம் நிறுவனத்தின் 'கோவிஷீல்ட்' மற்றும் பாரத் பயோடெக்கின் 'கோவாக்சின்' ஆகும். ஸ்புட்னிக்-வி, இந்தியாவில் உள்ள பல நிறுவனங்களால் இந்தியாவிலேயே தயாரிக்கப்படவுள்ளது.

---

**4.சமீபத்திய செய்திகளில் இடம்பெற்ற, அண்டார்டிகாவின் 'டூம்ஸ்டே பனிப்பாறை'யின் மெய்யான பெயர் என்ன?**

**அ) திவைட்ஸ் பனிப்பாறை ☑**



ஆ) பைன் தீவு பனிப்பாறை

இ) ஜாகோப்சவ்ன் பனிப்பாறை


ஈ) ஹெல்ஹெய்ம் பனிப்பாறை

✓ "டூம்ஸ்டே பனிப்பாறை" என்றும் அழைக்கப்படுகிற திவைட்ஸ் பனிப்பா-றையானது, அண்டார்டிகாவில் உள்ளது. இது கடந்தசில ஆண்டுகளாக வேகமாக உருகிவருகிறது. 1.9 லட்சம் ச கி மீ., என்ற பேரளவிலான இப் பனிப்பாறையில், உலகின் கடல் மட்டத்தை ½ மீட்டருக்கு மேல் உயர்த்த போதுமான நீர் உள்ளது. அண்மையில், சுவீடனின் கோத்தன்பர்க் பல்க-லைக்கழக ஆராய்ச்சியாளர்கள், இந்தப் பனிப்பாறை கணித்ததைவிட மிக வேகமாக உருகுவதைக் கண்டறிந்துள்ளனர்.

---

**5. உழவர்களுக்கான நேரடி கட்டணம் செலுத்தும் பணியில் "அர்தி-யாக்களை" ஈடுபடுத்தவுள்ள மாநிலம் எது?**

அ) இராஜஸ்தான்



**ஆ) பஞ்சாப் ☑**

இ) மத்திய பிரதேசம்

ஈ) உத்தர பிரதேசம்

✓ குறைந்தபட்ச ஆதரவு விலையை நேரடியாக உழவர்களின் கணக்கு-களில் செலுத்துவதாக பஞ்சாப் அரசு மத்திய அரசிடம் தெரிவித்துள்ளது. முன்னதாக, அர்தியாக்கள் (தரகு முகவர்கள்) உழவர்களுக்கு பணம் செலுத்துவார்கள். பஞ்சாப் மாநில முதலமைச்சர் கேப்டன் அமரீந்தர் சிங், கொள்முதல் மென்பொருளை மாநில உணவுத் துறை திருத்தியுள்ளதாக அறிவித்தார், இதனால் நேரடி பணம் செலுத்தும் பணியில் அர்தியாக்கள் தொடர்ந்து ஈடுபடுத்தப்படுவார்கள்.

---

**6. தடுப்பூசி செயல்முறை குறித்து செய்திகளில் அடிக்கடி காணப்பட்ட 'AEFI' என்பதன் விரிவாக்கம் என்ன?**

அ) Adequate events following immunisation



**ஆ) Adverse events following immunisation ☑**

இ) Appropriate events following immunisation

ஈ) Affected events following immunisation

✓ AEFI என்பது "நோய்த்தடுப்புக்குப்பின் ஏற்படும் மோசமான நிகழ்வுக-ளை" குறிக்கிறது. இந்தியா இதற்கு முன்னர் AEFI தொடர்பான தேசிய குழுவை அமைத்திருந்தது. சுமார் 617 கடுமையான மற்றும் தீவிரமான AEFI (இறப்புகள் உட்பட) மற்றும் 180 இறப்புகள் பதிவாகியுள்ளன. AEFI தொடர்பான தேசியக் குழுவின் உறுப்பினர் ஒருவர், நிலைமையைக் கண்காணிக்க, விரிவான எந்திரங்களை இந்தியா கொண்டுள்ளதாக எடுத்துரைத்துள்ளார்.

---

**7. வர்த்தக & தொழிற்துறை அமைச்சரானவர் எந்த அலுவலகத்தின் 'வர்த்தக வசதி திறன்பேசி செயலி'யை அறிமுகப்படுத்தினார்?**

**அ) DGFT ☑**





ஆ) DGTR

இ) MPEDA

ஈ) APEDA

✓ வர்த்தக மற்றும் தொழிற்துறை அமைச்சரான பியூஷ் கோயல் சமீபத்தில் வெளிநாட்டு வர்த்தக இயக்குநரகத்தின், 'வர்த்தக வசதி திறன்பேசி செயலி'யை அறிமுகப்படுத்தினார். இச்செயலி அதிநவீன அமைப்பைக் கொண்டுள்ளதோடு மட்டுமல்லாமல் நிகழ்நேர வர்த்தக கொள்கை புதுப்-பிப்புகள், பயன்பாடுகள் மற்றும் நிகழ்நேர தரவையும் வழங்குகிறது.

✓ இது செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான 24x7 உதவியையும் DGFT'இன் அனைத்து சேவைகளையும் வழங்கும்.

---

**8. ஊட்டச்சத்து சீரான உணவை வலியுறுத்தி சுகாதார அமைச்சரால் தொடங்கப்படவுள்ள இயக்கத்தின் பெயர் என்ன?**

அ) போஷான் கிரந்தி

**ஆ) ஆகார் கிரந்தி ☑**

இ) உணவு இந்தியா இயக்கம்

ஈ) உணவு கழிவில்லா இயக்கம்

✓ ஊட்டச்சத்து சீரான உணவின் அவசியத்தை வலியுறுத்தி, "ஆகார் கிரந்-தி" என்ற இயக்கத்தை மத்திய சுகாதார அமைச்சர் ஹர்ஷ் வர்தன் தொடங்கவுள்ளார். "நல்ல உணவு-நல்ல அறிவாற்றல்" என்ற தாரக மந்-திரத்துடன் விஞ்ஞான பாரதி மற்றும் உலகளாவிய இந்திய அறிவியலா-ளர்கள் மற்றும் தொழில்நுட்பவியலாளர்கள் மன்றம் (GIST) ஆகியவை இணைந்து இதனை தொடங்கின.

✓ இந்தத் திட்டம் மாணவர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கும்.

---

**9. ஓர் அண்மைய தரவுகளின்படி, சிலிக்கா ஏரியில், பின்வரும் எந்த உயிரினத்தின் எண்ணிக்கை இரட்டிப்பாகியுள்ளது?**



**அ) ஓங்கில்கள் ☑**

ஆ) முதலைகள்

இ) கெளுத்தி மீன்கள்

ஈ) ஆமைகள்

✓ சிலிக்கா ஏரியானது இந்தியாவின் மிகப்பெரிய உப்பு நீர் ஏரியாகும்; இது, ஒடிஸா மாநிலத்தின் பூரி, குர்தா மற்றும் கஞ்சம் ஆகிய மாவட்டங்களில் பரவியுள்ளது. மாநில வன மற்றும் சுற்றுச்சூழல் துறையின் சமீபத்திய தரவு வெளியீட்டின்படி, இந்த ஏரியில் வாழ்ந்து வரும் ஓங்கில்களின் எண்ணிக்கை கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு இருமடங்காக அதிக –ரித்துள்ளது. சிலிக்கா ஏரி அதன் ஐராவதி ஓங்கில்களுக்கு பெரும் பெயர் பெற்றதாகும்.

---

**10. ஆர்ட்டெமிஸ் திட்டத்தை மேற்கொள்ளும் அமைப்பு எது?**

அ) DRDO

ஆ) ISRO

**இ) NASA ☑**

ஈ) உலக வங்கி

✓ ஆர்ட்டெமிஸ் திட்டம் என்பது NASA'இன் மனிதனை நிலவுக்கு அனுப்பும் திட்டமாகும். 2024ஆம் ஆண்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. 2024'இல் செயல்படுத்தப்படவுள்ள இத்திட்டத்தின் ஒருபகுதியாக, அண் –மையில், நிலவில் கால்பதிக்கவுள்ள முதல் வெள்ளையரல்லாத பெண்ணையும் NASA அறிவித்துள்ளது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

### 1. மு க ஸ்டாலினுக்கு விருது

சமூக நலத்திட்டங்களைச் சிறப்பாக செயல்படுத்தியதற்காக 'இன்டராக்டிவ் போரம் ஆன் இந்தியன் எகானமி' அமைப்பு சார்பில் திமு கழக தலைவர் மு க ஸ்டாலினுக்கு விருது வழங்கப்பட்டது. 'இன்டராக்டிவ் போரம் ஆன் இந்தியன் எகானமி' என்ற அமைப்பு சார்பில் திமு கழக தலைவர் மு க ஸ்டாலினுக்கு சமூக நலத் திட்டங்களுக்கான 'சேம்பியன்ஸ் ஆப் சேஞ்ச்' விருது கோவா மாநிலம் தாஜ் ரெசார்ட் மற்றும் கன்வென்ஷன் சென்டரில் நடைபெற்ற விழாவில் வழங்கப்பட்டது. நிகழ்ச்சிக்கு மகாராஷ்டிர மாநில ஆளுநர் பகத் சிங் கோஷியாரி தலைமைவகித்தார்.

---

### 2. 5 மாநிலத் தேர்தலில் ரூ. 1,000 கோடி பறிமுதல்: தமிழகம் முதலிடம்

5 மாநில பேரவைத் தேர்தல்களில் இதுவரை இல்லாத அளவுக்கு ₹1,000 கோடிக்கு ரொக்கம், மதுபானம், இலவச பொருள்கள் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. இது கடந்த 2016'இல் பறிமுதல் செய்யப்பட்டதைவிட நான்கு மடங்கு அதிகமாகும்.

இதில் தேர்தல் முடிவடைந்த தமிழ்நாட்டில் அதிகபட்சமாக ₹446.28 கோடியும், நான்கு கட்டத் தேர்தல் முடிவடைந்த மேற்கு வங்கத்தில் ₹300.11 கோடியும், அஸ்ஸாமில் ₹122.35 கோடியும், கேரளத்தில் ₹84.91 கோடியும், புதுச்சேரியில் ₹36.95 கோடியும் அடங்கும். இதுவரை மொத்தம் ₹1001.44 கோடி பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகவும், கடந்த 2016'இல் இது ₹225.77 கோடியாக இருந்ததாகவும் தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

தேர்தலில் கட்சிக்கு ஆதரவாக வாக்களிக்க வாக்காளர்களுக்கு பணம் பட்டுவாடா, இலவச பொருள்கள், மதுபானப் பொருள்கள் ஆகியவை வழங்குவதைத் தடுக்க வாக்குப் பதிவு நடைபெறும் வரை தேர்தல் ஆணையம் காவல்துறை, வருமான வரித்துறையினருடன் சேர்ந்து தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருகிறது. அதன்படி, தமிழ்நாட்டில் பிடிபட்ட ₹446.28 கோடி பணத்தில் ₹236.69 கோடி வாக்காளர்களுக்கு விநியோ –கிக்கப்பட இருந்தது. தமிழகத்தில் பெரும்பாலும் வாக்காளர்களுக்கு பணப் பட்டுவாடா செய்யப்படுகிறது.

புதுவையில் வாக்காளர்களைக் கவர விலை உயர்ந்த பொருள்கள் வழங்கப்படுகின்றன. அங்கு பறிமுதல் செய்யப்பட்ட ₹36.95 கோடியில் ₹27.42 கோடியில் விலை உயர்ந்த பொருள்களாக உள்ளன.

மேற்கு வங்கத்தில் இதுவரை ₹118.33 கோடிக்கு போதைப் பொருள்கள் பறிமுதல் செய்யப்பட்டன. கேரளத்தில் வாக்காளர்களை கவர தங்க நகைகள் உள்ளிட்ட விலை உயர்ந்த பொருள்கள் வழங்கப்படுகின்றன. அங்கு பறிமுதல் செய்யப்பட்ட ₹84.91 கோடியில் ₹50.86 கோடிக்கு விலை உயர்ந்த பொருள்களாகும். அஸ்ஸாமில் வாக்காளர்களுக்கு இலவசமாக மதுபானங்கள் வழங்கப்படுகின்றன. அதன்படி ₹41.97 கோடிக்கு மது பானங்கள் அங்கு பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

5 மாநில பேரவைத் தேர்தலில் 1,000 கோடி வரையில் பறிமுதல் செய்யப் –பட்டுள்ளது தேர்தல் ஆணையத்தின் வரலாற்றில் மைல்கல் என்றும், வருமான வரி உள்ளிட்ட பல்வேறு துறைகளுடன் சேர்ந்து நடத்திய சோதனையில்தான் இது சாத்தியமானது என்றும் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. தமிழ்நாடு, கேரளம், அஸ்ஸாம், புதுச்சேரி ஆகிய நான்கு மாநிலங்களில் பேரவைத் தேர்தல்கள் முடிவடைந்துள்ளன. மேற்கு வங்கத்துக்கு இன்னும் மூன்றுகட்டத் தேர்தல்கள் நடைபெறவுள்ளன. வாக்கு எண்ணிக்கை மே.2 அன்று நடைபெறுகிறது.

---

### 3. பொருளாதார விவகாரத் துறை செயலராக அஜய் சேத் பொறுப்பேற்பு

மத்திய நிதி அமைச்சகத்தில் பொருளாதார விவகாரத் துறை செயலராக அஜய் சேத் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார். இதுகுறித்து நிதி அமைச்சகம் வெளியிட்டுள்ள சுட்டுரை செய்தியில் தெரிவித்துள்ளதாவது: மத்திய நிதி அமைச்சகத்தின் பொருளாதார விவகாரத் துறையின் புதிய செயலராக அஜய் சேத் பொறுப்பேற்றுக்கொண்டார்.

பொருளாதார விவகாரத் துறையின் செயலராக இருந்த தருண் பஜாஜ் மத்திய நிதி அமைச்சகத்தின் வருவாய்த்துறை செயலராக நியமிக்கப்பட்ட –தைத் தொடர்ந்து அஜய் சேத் இப்பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ளதாக அந்தச் சுட்டுரைப் பதிவில் நிதி அமைச்சகம் தெரிவித்துள்ளது. 1987ஆம் ஆண்டு கர்நாடக மாநிலத்திலிருந்து IAS பணிக்கு தேர்வானவர் அஜய் சேத். பிரதமர் தலைமையிலான அமைச்சரவையின் நியமனக் குழு ஏப்.6 அன்று அஜய் சேத்தை பொருளாதார விவகாரங்களுக்கான செயலராக நியமனம் செய்வதாக அறிவித்தது குறிப்பிடத்தக்கது.

---

### 4. ஆசிய மல்யுத்தம்: வினேஷ், அன்ஷுவுக்கு தங்கம்

ஆசிய மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவின் வினேஷ் போகத், அன்ஷு மாலிக் ஆகியோர் தங்கம் வென்றனர். கஜகஸ்தானின் அல்மேட்டி நகரில் நடைபெற்று வரும் இந்தப் போட்டியில் மகளிர் 53 கிலோ எடைப் பிரிவில் பங்கேற்ற வினேஷ் போகத், ஒரு புள்ளியைக்கூட இழக்காமல் தங்கம் வென்றுள்ளார். சீனா மற்றும் ஜப்பானைச்சேர்ந்த வீராங்கனைகள் பங்கேற்காததால் வினேஷ் போகத்தின் வெற்றி எளிதானது. மகளிர் 57 கிலோ எடைப்பிரிவில் 19 வயதான அன்ஷு மாலிக் தங்கம் வென்றார்.

வினேஷ் போகத், அன்ஷு மாலிக் ஆகியோர் ஆசிய மல்யுத்த சாம்பியன்ஷி –ப்பில் தங்கம் வெல்வது இதுவே முதல்முறையாகும். வினேஷ் போகத் இதற்கு முன்பு நடைபெற்ற ஆசிய சாம்பியன்ஷிப் போட்டிகளில் 3 வெள்ளி உள்பட 7 பதக்கங்கள் வென்றிருந்தபோதிலும், இப்போதுதான் முதல் முறையாக தங்கம் வென்றுள்ளார். இதேபோல் இந்தியாவின் திவ்யா காக்ரன் (72 கிலோ எடைப் பிரிவு) தங்கமும், சாக்ஷி மாலிக் (65 கிலோ எடைப் பிரிவு) வெள்ளிப்பதக்கமும் வென்றனர்.

ஆசிய மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியா இதுவரை 4 தங்கம், 1 வெள்ளி, இரண்டு வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளது. முன்னதாக நடைபெற்ற ஆட்டங்களில் சரிதா (59 கிலோ எடைப்பிரிவு) தங்கமும், சீமா பிஸ்லா (50 கிகி எடைப்பிரிவு), பூஜா (76 கிலோ எடைப்பிரிவு) ஆகியோர் வெண்கலமும் வென்றது குறிப்பிடத்தக்கது.

---

### 5. 60% யுரேனியம் செறிவூட்டலை தொடங்கியது ஈரான்

வல்லரசு நாடுகளுடன் மேற்கொண்டுள்ள ஒப்பந்தத்தை மீறி, அணுசக்தி எரிபொருளான யுரேனியத்தை 60% வரை சுத்திகரிக்கும் பணியைத் தொடங்கியுள்ளதாக ஈரான் அறிவித்துள்ளது. நடான்ஸ் நகரத்தில் அமைந்து உள்ள தங்கள் நாட்டின் முக்கிய யுரேனியம் செறிவூட்டும் மையத்தில் இஸ்ரேலின் சதிச்செயலால் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகக் குற்றஞ்சாட்டி வரும் ஈரான், அதற்குப் பதிலடியாக இந்த நடவடிக்கையைத் தொடங்கியுள்ளது.

ஈரான் அணு ஆயுதம் தயாரிப்பதைத் தடுக்கும் வகையில் அந்த நாடு மீது ஐநா'இன் சர்வதேசப் பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக ஈரானின் பொருளாதாரம் பாதிக்கப்பட்டது. இந்த நிலையில், அமெரிக்கா, பிரிட்டன், ரஷியா, பிரான்ஸ், சீனா ஆகிய ஐநா பாதுகாப்பு கவுன்சில் நிரந்தர உறுப்பு நாடுகள், ஐரோப்பிய யூனியன் மற்றும்

ஜெர்மனியுடன் ஈரான் கடந்த 2015ஆம் ஆண்டு அணுசக்தி ஒப்பந்தம் மேற்கொண்டது. வரலாற்றுச் சிறப்புமிக்க அந்த ஒப்பந்தத்தில், தனது அணுசக்தி திட்டங்கள் அணுவாயுதம் தயாரிப்பதற்கானவை இல்லை என்பதை உறுதிசெய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள ஈரான் ஒப்புக்கொண்டது.

அதற்குப்பதிலாக, ஈரான் மீதான பொருளாதாரத் தடைகளை விலக்கிக் கொள்ள வல்லரசு நாடுகளும் சம்மதித்தன. ஒப்பந்தத்தின் ஒருபகுதியாக, யுரேனியம் எரிபொருளை 3.67 சதவீதத்துக்கும் மேல் செறிவூட்ட மாட்டோம் என ஈரான் உறுதியளித்தது. யுரேனியத்தை 90% செறிவூட்டினால்தான் அதனை அணுவாயுதங்களில் பயன்படுத்த முடியும் என்பதால் ஒப்பந்தத்தில் இந்த அம்சம் இடம்பெற்றிருந்தது.

இச்சூழலில், அமெரிக்க அதிபராக ஒபாமா இருந்தபோது உருவாக்கப்பட்ட இந்த ஒப்பந்தத்திலிருந்து விலகுவதாக, அடுத்த வந்த முன்னாள் அதிபர் டொனால்ட் டிரம்ப் கடந்த 2017ஆம் ஆண்டு அறிவித்தார். அதன் தொடர்ச்சியாக, அந்த ஒப்பந்தத்தின்கீழ் விலக்கப்பட்டிருந்த பொருளாதாரத் தடைகளை ஈரான் மீது அவர் மீண்டும் விதித்தார். இதற்கு, அணுசக்தி ஒப்பந்த நிபந்தனைகளை மீறுவதன்மூலம் ஈரான் பதிலடி கொடுத்து வருகிறது. அதன் ஒருபகுதியாக, ஒப்பந்தத்தில் கூறப்பட்டிருந்த 3.67 சதவீதத்துக்கு பதிலாக 20% வரை யுரேனியத்தை ஈரான் செறிவூட்டி வந்தது.

இதற்கிடையே, அணுசக்தி ஒப்பந்தத்தைப் பாதுகாப்பதற்காக ஆஸ்திரியா தலைநகர் வியன்னாவில் ஈரானுக்கும் வல்லரசு நாடுகளுக்கும் இடையே கடந்த வாரம் பேச்சுவார்த்தை நடைபெற்றது. இதில், அந்த ஒப்பந்தத்தில் மீண்டும் இணைய விருப்பம் தெரிவித்துள்ள புதிய அதிபர் ஜோ பைடன் தலைமையிலான அரசும் பங்கேற்றது.

இந்த நிலையில், ஈரானின் முக்கியத்துவம் வாய்ந்த நடான்ஸ் செறிவூட்டு மையத்தில் திடீர் மின்தடை ஏற்பட்டு, அதன் செறிவூட்டு கருவிகள் பாதிக்கப்பட்டன. இஸ்ரேலின் சதிச்செயல் காரணமாகவே அந்த பாதிப்பு ஏற்பட்டதாக ஈரான் குற்றஞ்சாட்டி வருகிறது. அதற்கு பதிலடி கொடுக்கும் வகையில், ஈரான் தற்போது யுரேனியத்தை 60% செறிவூட்டத் தொடங்கியிருப்பது, அணுசக்தி ஒப்பந்தத்தைப் பாதுகாப்பதற்காக நடைபெற்றுவரும் பேச்சுவார்த்தையில் பின்னடைவை ஏற்படுத்தும் என்று கூறப்படுகிறது.

---

### 6. அசோக் லேலண்ட் தயாரித்த குண்டு துளைக்காத வாகனம்: இந்திய விமானப் படையிடம் ஒப்படைப்பு

அசோக் லேலண்ட் நிறுவனம் லாக்கீட் மார்ட்டினுடன் இணைந்து தயாரித்த குண்டு துளைக்காத இலகு இரக வாகனம் இந்திய விமானப் படையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து அசோக் லேலண்ட் நிறுவனம் பங்குச் சந்தையிடம் தெரிவித்துள்ளதாவது: இந்திய விமானப் படைக்கு தேவையான இலகுரக குண்டு துளைக்காத வாகனத்தை தயாரிக்கும் ஒப்பந்தத்தைப் அசோக் லேலண்ட் பெற்றது. இதையடுத்து, லாக்கீட் மார்ட்டின் நிறுவனத்திடமிருந்து தொழில்நுட்ப பரிமாற்ற ஒப்பந்தத்தின்கீழ் இந்த வாகனத்தை அசோக் லேலண்ட் உருவாக்கியுள்ளது.

முற்றிலும் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட இந்த வாகனம் லாக்கீட் மார்ட்டின் 'CVNG' வாகனத்தின் மேம்படுத்தப்பட்ட பதிப்பாகும். இந்த வாகனம் முதல் கட்டமாக ஏப்.13ஆம் தேதி விமானப்படையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. LPPV வாகனம் சேறு, மண், பாறை, தண்ணீர் உள்ளிட அனைத்திலும் இயங்கக்கூடியது. இதில், தாக்குதலுக்கு தேவையான கணிசமான உபகரணங்களை கொண்டு செல்லலாம் என்பதுடன், 6 பேர் அடங்கிய குழுவும் இவ்வாகனத்தில் பயணிக்கலாம் என அசோக்லேலண்ட் தெரிவித்துள்ளது.

---

### 7. 'ஹீமோபிலியா நோயால் 1,800 குழந்தைகள் பாதிப்பு'

தமிழ்நாட்டில் 1800 ஆண் குழந்தைகள் 'ஹீமோபிலியா' நோயால் பாதிக்கப்பட்டிருப்பதாக எழும்பூர் குழந்தைகள்நல மருத்துவர் தெரிவித்தார். உலக 'ஹீமோபிலியா' நாள் ஒவ்வோர் ஆண்டும் ஏப்.17 அன்று கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

இதுகுறித்து குழந்தைகள் நலப்பிரிவு ஹீமட்டாலஜி துறை பேராசியர் Dr. இரவிச்சந்திரன் கூறியதாவது: காயத்தால் ஏற்படும் ரத்தக்கசிவு, ரத்தத்தில் உள்ள உறையும் தன்மையால், மனிதர்களுக்குச் சிறிது நேரத்தில் ரத்தம் வடிவது நின்றுவிடும். இந்த ரத்தம் உறைவதற்கு என நமது உடலில் 13 வகையான இரத்த உறைபொருள்கள் உள்ளன. ஆனால், இரத்த உறைபொருளின் குறைபாட்டால் இரத்தக்கசிவு சிலருக்கு எளிதில் நிற்பதில்லை. இதுவே 'ஹீமோபிலியா' எனப்படுகிறது.

உலகளவில் 'ஹீமோபிலியா' நோய் 10 ஆயிரத்தில் ஒருவருக்கு இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இந்நோய்க்கு சிகிச்சையளிப்பதற்காக தமிழகத்தில், எழும்பூர் குழந்தைகள்நல மருத்துவமனை, தேனி, தருமபுரி, மதுரை, சேலம் என 5 அரசு மருத்துவமனைகளில் பிரத்யேக சிகிச்சை மையங்கள் உள்ளன. இது பரம்பரை நோய் ஆகும். ஆண்களை மட்டும் தாக்கும் நோய். தமிழ்நாட்டில் இதுவரை 1,800 ஆண் குழந்தைகள் ஹீமோபிலியா நோயினால் பாதிக்கப்பட்டிருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

---

### 8. நிலவில் தரையிறங்குவதற்கான NASA விண்கலம்: உருவாக்குகிறது ஸ்பேஸ்–எக்ஸ்

நிலவுக்கு மனிதர்களை அனுப்பும் தனது திட்டத்துக்காக, தரையிறங்கும் கலத்தை உருவாக்கும் பொறுப்பை தனியார் நிறுவனமான ஸ்பேஸ்–எக்ஸுக்கு அமெரிக்க விண்வெளி ஆய்வு மையம் NASA வழங்கியுள்ளது. இதுகுறித்து அமெரிக்க ஊடகங்கள் தெரிவித்துள்ளதாவது: வரும் 2024ஆம் ஆண்டில் நிலவுக்கு மீண்டும் மனிதர்களை அனுப்ப NASA ஆய்வுமையம் திட்டமிட்டுள்ளது. அந்தத்திட்டத்தின்கீழ், நிலவுக்கு முதல்முறையாக ஒரு பெண் விண்வெளி வீராங்களை செல்லவிருக்கிறார்.

அத்திட்டத்தின்கீழ், நிலவில் தரையிறங்குவதற்கான கலத்தை உருவாக்கும் பணியை தனியார்நிறுவனத்துக்கு வழங்க NASA முடிவுசெய்தது. 289 கோடி டாலர் (சுமார் ₹21,542 கோடி) மதிப்புடைய இந்த ஒப்பந்தத்துக்காக, அமேஸான் நிறுவனர் ஜெஃப்ரி பேஸோஸின் நிறுவனம், அலாபாமாவைச் சேர்ந்த டைனடிக்ஸ், எலான் மஸ்கின் ஸ்பேஸ்–எக்ஸ் ஆகிய நிறுனங்கள் போட்டியிட்டன. இதில் ஸ்பேஸ்–எக்ஸ் நிறுவனம் வெற்றிபெற்றுள்ளது.

அந்த நிறுவனத்தின் ஸ்டார்ஷிப் கலத்தை அடிப்படையாகக் கொண்டு நிலவில் தரையிறங்குவதற்கான கலம் வடிவமைக்கபடவுள்ளது. தற்போது தெற்கு டெக்ஸாக்ஸ் பகுதியில் ஸ்பேஸ்–எக்ஸின் ஸ்டார்ஷிப் சோதித்துப் பார்க்கப்பட்டு வருகிறது என்று ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

---

### 9. கரோனா தடுப்பூசி போட்டால் கூடுதல் வட்டி: சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா புதிய திட்டம்:

இதுகுறித்து சென்ட்ரல் பாங்க் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: தற்போதைய பேரிடர் காலத்தை கருத்தில்கொண்டு, நோயற்ற சமுதாயத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடன் சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா 'நோயெதிர்ப்பு இந்தியா வைப்புத் திட்டம்' என்ற புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின்படி, தடுப்பூசி போட்டுக்கொண்ட வாடிக்கையாளர்கள், 1,111 நாட்களுக்கு குறிப்பிட்ட தொகையை வைப்புத்தொகையாக செலுத்தினால், அவர்களுக்கு வழக்கமாக வழங்கப்படும் வட்டி வருவாயை விட 0.25% கூடுதலாக வழங்கப்படும். எனவே, அனைத்து வாடிக்கையாளர்களும் தடுப்பூசி போட்டுக்கொண்டு, குறைந்த காலமே அமலில் இருக்கும் இந்தச் சிறப்பு சலுகை திட்டத்தை பயன்படுத்தி பயன்பெற வேண்டுகிறோம். மூத்த குடிமக்களுக்கும் இத்திட்டம் பொருந்தும்.

---

### 10. அருந்தானிய ஆண்டு

ஐநா பொதுக்குழு 2023ஆம் ஆண்டை அருந்தானிய ஆண்டாக (Year of Millets) அறிவித்துள்ளது. 193 நாடுகளை உறுப்பினர்களாகக்கொண்ட பொதுக்குழுவில் இந்தியா முன்மொழிந்த இந்தத் தீர்மானத்தைக் கென்யா, நைஜீரியா, நேபாளம், ரஷியா, வங்காளதேசம், செனகல் உள்ளிட்ட எழுபது நாடுகள் ஆதரித்தன. இந்த அறிவிப்பால், அருந்தானிய உற்பத்தி அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

---

**1.** **2020-21 நிதியாண்டுக்கான 37 பெரிய CPSE'கள் மற்றும் அரசு துறைகளின் ஒட்டுமொத்த மூலதன செலவு என்ன?**



**அ) ₹4.6 இலட்சம் கோடி ☑**

ஆ) ₹10.6 இலட்சம் கோடி

இ) ₹40.6 இலட்சம் கோடி

ஈ) ₹100.6 இலட்சம் கோடி

✓ இந்திய அரசாங்கம் வெளியிட்டுள்ள தரவுகளின்படி, 37 பெரிய CPSE'கள் மற்றும் துறைசார் நிறுவனங்களின் மொத்த மூலதன செலவுகள் 2020-21ஆம் நிதியாண்டில் ₹4.6 இலட்சம் கோடியாக உள்ளது. 2020-21 நிதி ஆண்டிற்கான மூலதன செலவின் இலக்கு ₹5 இலட்சம் கோடி வரை நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அதில், 92% வரை எட்டப்பட்டுள்ளது.

---

**2.** **'லிட்டில் குரு' செயலியை அறிமுகப்படுத்தியுள்ள நிறுவனம் எது?**



அ) ISRO

**ஆ) ICCR ☑**

இ) BHEL

ஈ) BARC

✓ இந்திய கலாச்சார உறவுகளுக்கான கவுன்சில் (ICCR) தனது 71ஆவது நிறுவு நாளை அண்மையில் கொண்டாடியது. பீஜிங்கில் உள்ள இந்திய தூதரகத்தில், சுவாமி விவேகானந்தர் கலாச்சார மையத்தில் நடத்தப்பட்ட கொண்டாட்டங்களில், நிறுவுநாள் கொண்டாட்டங்களுடன் 'லிட்டில் குரு' செயலியும் அறிமுகப்படுத்தப்பட்டது. இது, உலகின் முதல் விளையாட்டு மையமாக்கப்பட்ட சமற்கிருத கற்றல் செயலியாகும்.

---

**3.** **எந்த மாநிலத்தின் 3 கிளர்ச்சிக் குழுக்களுடனான போர்நிறுத்த ஒப்பந்தத்தை, இந்தியா, மேலும் ஓராண்டுக்கு நீட்டித்துள்ளது?**



அ) அஸ்ஸாம்

ஆ) சிக்கிம்

**இ) நாகாலாந்து ☑**


ஈ) அருணாச்சல பிரதேசம்

✓ நாகாலாந்து மாநிலத்தின் 3 கிளர்ச்சிக் குழுக்களுடனான போர்நிறுத்த ஒப்பந்தத்தை இந்திய அரசாங்கம் மேலும் ஓராண்டுக்கு நீட்டித்துள்ளது. போர் நிறுத்த ஒப்பந்தங்கள் 2022 ஏப்ரல் வரை நீட்டிக்கப்பட்டுள்ளன.

✓ மத்திய உள்துறை அமைச்சகத்தின்படி, இந்திய அரசாங்கத்திற்கும், NSCN NSCN/NK, NSCN/R மற்றும் NSCN/K-காங்கோ ஆகிய மூன்று குழுக்களுக்கும் இடையே போர்நிறுத்த ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டு செயல்பாட்டில் இருந்து வருகின்றன.

---

**4.** **மேலை ஆஸ்திரேலியாவில் நிலச்சரிவுகளை ஏற்படுத்திய வெப்ப மண்டல சூறாவளியின் பெயர் என்ன?**



**அ) செரோஜா ☑**

ஆ) பாப்

இ) நிவர்

ஈ) பானி

✓ வெப்பமண்டல சூறாவளியான செரோஜா அண்மையில் மேலை ஆஸ்திரேலியாவின் 1,000 கிமீ நீள நிலப்பரப்பை தாக்கி சேதப்படுத்தியது. மணிக்கு 170 கிலோ மீட்டர் வேகத்துக்கு வீசிய மூன்றாம் வகை புயல், அங்கு நிலச்சரிவுகளை ஏற்படுத்தியது. ஆஸி., நாட்டின் வானிலை ஆய்வு மையத்தின்படி, இந்தப் புயல் பலவீனமடைந்த போதிலும், அது, மணிக்கு 110 கிமீ வேகத்தில் புயல் காற்றை வீசும்.

---

**5.** **அண்மையில் தொடங்கப்பட்ட டிஜிட்டல் தளமான, "இ-சாண்டா" என்பதுடன் தொடர்புடைய தயாரிப்பு எது?**



அ) மருந்துகள்

**ஆ) மீன்வளர்ப்பு தயாரிப்புகள் ☑**

இ) மின்னணு தயாரிப்புகள்

ஈ) ஜவுளி தயாரிப்புகள்

✓ மீன் விவசாயிகளையும் வாங்குபவர்களையும் இணைக்கும் மின்னணு சந்தையான, 'இ-சாண்டா'வை மத்திய வர்த்தக மற்றும் தொழிற்துறை அமைச்சர் பியூஷ் கோயல் திறந்து வைத்தார். 'eSanta' என்பது electronic Solution for Augmenting National centre for sustainable aquaculture (NaCSA) farmers' Trade in Aquaculture" என்பதாகும். NaCSA என்பது கடல்சார் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையத்தின் (MPEDA) ஒரு விரிவாக்கப்பட்ட குழுமமாகும்.

---

**6.** **ஹிடெக்கி மாட்சுயாமா என்பவர் பின்வரும் எந்த விளையாட்டின் சாம்பியன்ஷிப்பான முதல் ஜப்பானிய வீரராக மாறியுள்ளார்?**



அ) டென்னிஸ்

**ஆ) கால்ப் ☑**

இ) சதுரங்கம்

ஈ) பூப்பந்து

✓ அகஸ்டா நேஷனல் கால்ப் கிளப்பில் மாஸ்டர்ஸ் வென்ற ஹிடெக்கி மாட்சுயாமா, ஆடவர் மேஜர் சாம்பியன்ஷிப்பைப் பெற்ற முதல் ஜப்பானிய வீரர் என்ற பெருமையைப் பெற்றார். 29 வயதான இவர் உலகளவில் 15 வெற்றிகளையும், எட்டு சாம்பியன்ஷிப் போட்டிகளில் முதல் பத்து இடங்க-ளையும் பெற்றுள்ளதோடு 4 பிரெஸிடென்ட் கோப்பை போட்டிகளிலும் பங்கேற்றுள்ளார். கடந்த 2012ஆம் ஆண்டில், உலக அமெச்சூர் கால்ப் தரவரிசையில் மாட்சுயாமா முதலிடத்தைப் பிடித்தார்.

---

**7.** **நிதித்துறைக்கான காலநிலை மாற்ற சட்டத்தை முதன்முதலில் அறிமுகப்படுத்திய நாடு எது?**



அ) பிரேஸில்

ஆ) ஜெர்மனி

**இ) நியூசிலாந்து ☑**

ஈ) பிரான்ஸ்

✓ நிதித்துறைக்கான காலநிலை மாற்ற சட்டத்தை அறிமுகப்படுத்திய உல-கின் முதல்நாடாக நியூசிலாந்து திகழ்கிறது. வங்கிகள், காப்பீட்டாளர்கள் மற்றும் முதலீட்டு மேலாளர்கள் தங்கள் வணிகத்தில் காலநிலை மாற்ற-த்தின் தாக்கங்களை தெரிவிக்க இச்சட்டம் தேவைப்படுகிறது.

✓ காலநிலை தொடர்பான அபாயங்கள் மற்றும் வாய்ப்புகளை நிதி நிறுவ-னங்கள் எவ்வாறு நிர்வகிக்கும் என்பதை விளக்க இச்சட்டம் அவற்றை கேட்டுக்கொள்கிறது.

---

**8.** **இந்திய இராணுவம், MEGHDOOT நடவடிக்கையை தொடங்கிய நாளை, பின்வரும் எந்தச் சிறப்பு நாளாக அனுசரிக்கிறது?**



அ) விஜய் திவாஸ்

ஆ) கார்கில் திவாஸ்

**இ) சியாச்சின் நாள் ☑**

ஈ) ரக்ஷா திவாஸ்

✓ 1984 ஏப்.13 அன்று, சால்டோரோ முகட்டு வரையில் உள்ள பிலாபாண்ட் லா மற்றும் பிற கணவாய்களைப் பாதுகாப்பதற்காக இந்திய இராணுவம் 'ஆபரேஷன் மேகதூத்' என்றவொன்றைத் தொடங்கியது. சியாச்சின் நாளானது ஒவ்வோர் ஆண்டும் இந்திய இராணுவத்தின் படைகள், உலகின் உயரம் மிகுந்த மற்றும் குளிரான போர்க்களமான சியாச்சின் பனிப்பாறையை பாதுகாப்பதில் காட்டிய வீரத்தை நினைவுகூர்கிறது.

---

**9.** **உடல்நலம் மற்றும் ஊட்டச்சத்துகுறித்த தேசிய டிஜிட்டல் களஞ்சி-யமான 'போஷன் கியான்' என்பதை அறிமுகப்படுத்திய நிறுவனம் எது?**

அ) பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம்

**ஆ) NITI ஆயோக் ☑**

இ) தேசிய பெண்கள் ஆணையம்

ஈ) நிதி ஆணையம்

NITI Aayog

✓ NITI ஆயோக் ஆனது பில் & மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளை மற்றும் அசோகா பல்கலைக்கழகத்தின் சமூக & நடத்தை மாற்ற மையத்துடன் இணைந்து, 'போஷன் கியானை' அறிமுகப்படுத்தியது.

- ✓ இது, உடல்நலம் மற்றும் ஊட்டச்சத்து குறித்த தேசிய டிஜிட்டல் களஞ்சிய –மாகும். இது ஊட்டச்சத்து துறையில் விழிப்புணர்வு உருவாக்கம் மற்றும் நடத்தை மாற்றத்திற்காக அரசு நிறுவனங்கள் மற்றும் பிற மேம்பாட்டு அமைப்புகளால் உருவாக்கப்பட்ட தகவல் தொடர்பு குறிப்புகளின் தொகுப் –பாகும்.

---

**10. இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையமானது (NHAI) சிறந்த சாலைகளை வழங்குவதற்காக, 'NSV'ஐ பயன்படுத்தவுள்ளது. இங்கு, 'NSV' என்பது எதைக் குறிக்கிறது?**

அ) National Standard Vehicle

**ஆ) Network Survey Vehicle ☑**

இ) National Signal Variance

ஈ) New Standard Vehicle

- ✓ இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையமானது பயணிகளுக்கு சிறந்த சாலைகளை வழங்குதற்காக, Network Survey Vehicle (NSV) என்பதை பயன்படுத்தவுள்ளது.
- ✓ NSV'ஐப் பயன்படுத்தி திட்டம் நிறைவுவடையும் போதும், அதன்பிறகு ஒவ்வோர் 6 மாதத்திற்கும் ஒருமுறை சாலையின் நிலையை ஆய்வுசெய் –வதை NHAI கட்டாயமாக்கியுள்ளது. ஆலோசனை சேவைகளின் நிலை –யான ஏல ஆவணத்தின் ஒருபகுதியாக இது சேர்க்கப்பட்டுள்ளது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. உதவி சொலிசிட்டர் ஜெனரலாக R ராஜேஷ் விவேகானந்தன் பதவி ஏற்பு**

சென்னை உயர்நீதிமன்றத்தில், மத்திய அரசு சார்பில் வழக்குகளில் ஆஜ ராவதற்கு, உதவி சொலிசிட்டர் ஜெனரலாக R இராஜேஷ் விவேகானந்தன் நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கான உத்தரவை மத்திய அரசு அண்மையில் பிறப்பித்தது. இதனையடுத்து, உதவி சொலிசிட்டர் ஜெனரலாக வழக்குரை –ஞர் இராஜேஷ் விவேகானந்தன், கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் சங்கர நாராயணன் முன்னிலையில் பதவி ஏற்றுக்கொண்டார்.

---

**2. 162 மருத்துவ ஆக்சிஜன் உற்பத்தி ஆலைகளுக்கு அனுமதி**

நாடு முழுவதும் 162 மருத்துவ ஆக்சிஜன் உற்பத்தி ஆலைகளை அமைப்பதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாக மத்திய சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக மத்திய சுகாதார அமைச்சு வெளியிட்ட சுட்டுரைப் பதிவுகளில், "இந்த ஆலைகள் மூலமாக 154.19 மெட்ரிக் டன் மருத்துவ ஆக்சிஜன் கூடுதலாக உற்பத்தி செய்யப்படவுள்ளது. 33 ஆலைகள் ஏற்கெனவே அமைக்கப்பட்டுவிட்டன.

அதிகபட்சமாக மத்திய பிரதேச மாநிலத்தில் ஐந்து ஆலைகளும், ஹிமாசல பிரதேசத்தில் நான்கு ஆலைகளும் அமைக்கப்பட்டுள்ளன. குஜராத், பிகார், கர்நாடகம், கேரளம், மகாராஷ்டிரம், பஞ்சாப் உள்ளிட்ட மாநிலங்களிலும் ஆலைகள் அமைக்கப்பட்டுள்ளன. இம்மாத இறுதிக்குள் மேலும் 54 ஆலை –களும், அடுத்த மாத இறுதிக்குள் கூடுதலாக எண்பது ஆலைகளும் அரசு மருத்துவமனைகளில் விரைவில் அமைக்கப்படும்.

ஆலைகளை அமைப்பதற்கும் பராமரிப்பதற்கும் ₹201.58 கோடி நிதியை மத்திய அரசு செலவிடவுள்ளது" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

---

**3. இந்தியாவில் மின்சார பயன்பாடு 45% உயர்வு**

நடப்பு ஏப்ரல் மாதத்தின் இருவார காலத்தில் உள்நாட்டில் மின்சாரத்தின் பயன்பாடு ஏறக்குறைய 45% அளவுக்கு அதிகரித்து 60.62 பில்லியன் யூனிட்டுகளை எட்டியுள்ளது. இதுகுறித்து மத்திய எரிசக்தி துறை அமைச்ச –கத்தின் புள்ளிவிவரத்தில் தெரிவித்துள்ளதாவது: கடந்த 2020ஆம் ஆண்டு ஏப்.1–15 வரையிலான காலகட்டத்தில் உள்நாட்டில் மின்சார பயன்பாடு 41.91 பில்லியன் யூனிட்டுகளாக இருந்தது. இந்த நிலையில், நடப்பாண்டு ஏப்.1–15 தேதிகளுக்கு இடைப்பட்ட காலத்தில் மின்சார பயன்பாடு 60.62 பில்லியன் யூனிட்டுகளாக கணிசமாக உயர்ந்துள்ளது. ஆக, கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது நடப்பு மாதத்தின் இருவார காலத்தில் மின் நுகர்வு 45% உயர்ந்துள்ளது.

இது, தொழிலக மற்றும் வர்த்தக நடவடிக்கைகள் வலுவான நிலையில் மீண்டு வருவதை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது.

நடப்பு ஏப்ரலின் முதல் இருவார காலத்தில் உச்சபட்ச மின்தேவையான 182.55 GW 8ஆம் தேதியன்று எட்டப்பட்டது என அந்தப் புள்ளிவிவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**4. வளர்ச்சித் திட்டங்களில் மரபுசாரா எரிசக்திக்கு முக்கியத்துவம்**

மத்திய அரசு செயல்படுத்தி வரும் வளர்ச்சித் திட்டங்களில் மரபுசாரா எரிசக்திக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருவதாக மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் பிரகாஷ் ஜாவடேகர் தெரிவித்துள்ளார்.

அமேசான் இணையவழி வர்த்தக நிறுவனம் சார்பில் தொழில்முனை –வோருக்காக நடத்தப்பட்ட பிரத்யேக நிகழ்ச்சியில் அமைச்சர் ஜாவடேகர் காணொலி வாயிலாக உரையாற்றினார். அப்போது அவர் கூறியதாவது:

தற்போதைய சூழலில், மொத்த கரியமில வாயு வெளியேற்றத்தில் 7% மட்டுமே இந்தியாவின் பங்களிப்பாக உள்ளது. எனினும், சுற்றுச்சூழல் பாதிப்பைக் கட்டுக்குள் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை இந்தியா மேற்கொண்டுவருகிறது. கடந்த 6 ஆண்டுகளில் சூரிய ஆற்றல் வாயிலாக மின்சாரம் உற்பத்தி செய்வது 14 மடங்கு அதிகரித்துள்ளது.

கரியமில வாயு வெளியேற்றம் 26 சதவீதம் குறைக்கப்பட்டுள்ளது. மொத்த எரிசக்தி பயன்பாட்டில் மரபுசாரா எரிசக்தியின் பங்களிப்பு 38 சதவீதமாக அதிகரித்துள்ளது. மரபுசாரா எரிசக்தி வாயிலாக தற்போது 136 கிகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. இதை அடுத்த ஆண்டுக்குள் 175 கிகா வாட்டாக அதிகரிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 2030ஆம் ஆண்டுக்குள் 450 கிகா வாட் மின்சாரத்தை மரபுசாரா எரிசக்தி வாயிலாக உற்பத்தி செய்வதற்கும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 65 நகரங்களில் 6,500 மின்–வாகனங்களை செயல்பாட்டுக்குக் கொண்டு வருவதற்காக ₹10,000 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் உள்ளிட்டவை ஆண்டுதோறும் தனிநபரு –க்கு 12,000 கிலோ வாட்டுக்கு அதிகமான மின்சாரத்தைப் பயன்படுத்தி வருகின்றன. இந்தியாவில் அது 1,200 கிலோ வாட்டாக மட்டுமே உள்ளது. என்றார் அமைச்சர் ஜாவடேகர்.

---

**5. நாட்டின் தங்கம் இறக்குமதி 23% அதிகரிப்பு**

நாட்டின் தங்கம் இறக்குமதி கடந்த 2020–21ஆம் நிதியாண்டில் 22.58% அதிகரித்துள்ளதாக மத்திய நிதி அமைச்சகம் தெரிவித்துள்ளது. இதுகுறித்து அந்த அமைச்சகம் புள்ளிவிவரத்தில் மேலும் கூறியுள்ளதாவது: உள்நாட்டில் தேவை அதிகரித்ததையடுத்து தங்கம் இறக்குமதி 2020–21ஆம் நிதி ஆண்டில் 3,460 கோடி டாலராக (இந்திய மதிப்பில் சுமார் ₹2.54 இலட்சம் கோடி) அதிகரித்துள்ளது. இது, முந்தைய 2019–2020ஆம் நிதியாண்டில் இறக்குமதியான 2,823 கோடி டாலர் (₹2 இலட்சம் கோடி) தங்கத்துடன் ஒப்பிடுகையில் 22.58% அதிகமாகும்.

கடந்த நிதியாண்டில் வெள்ளி இறக்குமதி 71% குறைந்து 79.1 கோடி டாலர் என்ற அளவிலேயே காணப்பட்டது. தங்கம் இறக்குமதி அதிகரித்த போதிலு –ம் நாட்டின் வர்த்தக பற்றாக்குறை கடந்த நிதியாண்டில் 9,856 கோடி டாலராக குறைந்துள்ளது. இது, 2019–20'இல் 16,130 கோடி டாலராக அதி –கரித்திருந்தது என வர்த்தக அமைச்சகம் அந்தப் புள்ளிவிவரத்தில் தெரிவி –த்துள்ளது. ஆபரணங்களுக்கான தேவை அதிகரித்து காணப்படுவதைய –டுத்து நம் நாட்டில் ஆண்டுக்கு 800 முதல் 900 டன் தங்கத்தை இறக்குமதி செய்யப்படுகிறது.

மத்திய அரசு பட்ஜெட்டில் தங்கத்துக்கான இறக்குமதி வரியை 12.5 சதவீத –த்திலிருந்து குறைத்து 10 சதவீதமாக (7.5% சுங்கவரி + 2.5% வேளாண் உள்கட்டமைப்பு மேம்பாட்டு வரி) நிர்ணயித்துள்ளது.

---


ஆசிய பளுதூக்குதல் சாம்பியன்ஷிப்

தங்கம் வென்றார் ஜில்லி தலாபெஹரா

தாஷ்கண்ட், ஏப். 18: உஸ்பெகிஸ்தானில் நடைபெறும் ஆசிய பளுதூக்குதல் சாம்பியன்ஷிப் போட்டியில் இந்திய வீராங்கனை ஜில்லி தலாபெஹரா தனது பிரிவில் தங்கப் பதக்கம் வென்றார்.

45 கிலோ பிரிவில் பங்கேற்ற ஜில்லி தலாபெஹரா, ஸ்னாட்ச் பிரிவில் 69 கிலோ, கிளீன் அண்ட் ஜெர்க் பிரிவில் 88 கிலோ என மொத்தமாக 157 கிலோ எடையை தூக்கி தங்கப் பதக்கம் வென்றார். இப்போட்டியில் கடந்த 2019-ஆம் ஆண்டில் பங்கேற்றபோது இதே பிரிவில் வெள்ளிப் பதக்கம் வென்றிருந்த ஜில்லி, தற்போது தங்கப் பதக்கத்துக்கு முன்னேறியுள்ளார்.

சானுவுக்கு வெண்கலம்: அதேபோல், மகளிருக்கான 49 கிலோ பிரிவில் இந்தியாவின் மீராபாய் சானு வெண்கலப் பதக்கம் வென்றார். அவர் ஸ்னாட்ச் பிரிவில் 86 கிலோ, கிளீன் அண்ட் ஜெர்க் பிரிவில் 119 கிலோ என மொத்தமாக 205 கிலோ எடையைத் தூக்கி 3-ஆம் இடம் பிடித்தார். இந்த 205 கிலோ எடையானது புதிய தேசிய சாதனையாகும். அதேபோல் கிளீன் அண்ட் ஜெர்க் பிரிவில் அவர் தூக்கிய 119 கிலோ எடை புதிய உலக சாதனை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவர்கள் தவிர மகளிருக்கான 55 கிலோ பிரிவில் 'குரூப் பி'-இல் பங்கேற்றிருந்த இந்திய வீராங்கனை ஸ்னேகா சோரன் 3-ஆம் இடம் பிடித்தார். அவர் ஸ்னாட்ச் பிரிவில் 71 கிலோ, கிளீன் அண்ட் ஜெர்க் பிரிவில் 93 கிலோ என மொத்தமாக 164 கிலோ எடையைத் தூக்கியிருந்தார். 'குரூப் ஏ'-இல் உள்ள வீராங்கனைகளின் முடிவுகள் தெரியவந்த பின்னரே, ஸ்னேகாவுக்கான இறுதி இடம் குறித்து தெரியவரும்.

**7. மான்டி கார்லோ: சிட்சிபாஸ் சாம்பியன்**

மான்டி கார்லோ மாஸ்டர்ஸ் டென்னிஸ் போட்டியில் கிரீஸின் ஸ்டெபா –னோஸ் சிட்சிபாஸ் சாம்பியன் ஆனார். போட்டித்தரவரிசையில் நான்காம் இடத்திலிருந்த சிட்சிபாஸ் இறுதிச்சுற்றில், போட்டித்தரவரிசையில் ஆறாம் இடத்திலிருந்த ரஷியாவின் ஆன்ட்ரே ருபலேவை 6–3, 6–3 என்ற நேர் செட்களில் வீழ்த்தினார். 'மாஸ்டர்ஸ் 1000' பிரிவில் சிட்சிபாஸ் வெல்லும் முதல் பட்டம் இது. ATP டூர் போட்டிகளில் இது அவரது ஆறாவது பட்டம்.

**பாவிச்/மெக்டிச் சாம்பியன்:** மான்டி கார்லோ மாஸ்டர்ஸ் போட்டியில் இரட் –டையர் பிரிவில் குரோஷியாவின் மேட் பாவிச்/நிகோலா மெக்டிச் இணை 6–3, 4–6, 10–7 என்ற செட்களில் பிரிட்டனின் நீல் ஸ்குப்ஸ்கி / டேன் இவான்ஸ் இணையை வென்று சாம்பியன் ஆனது.

---

**8. உயர்கல்வி விருப்பப் பாடப்பிரிவில் NCC சேர்ப்பு:**

**பல்கலைக்கழக மானியக்குழுவின் செயலர் ரஜினிஷ் ஜெயின், அனைத்து உயர்கல்வி நிறுவனங்களுக்கும் அனுப்பிய சுற்றறிக்கை:** புதிய கல்விக் கொள்கையில் உயர் கல்விக்கான விருப்பப் பாடப்பிரிவு தேர்வு முறையில் தளர்வுகளை வழங்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. NCC பயிற்சியை விருப்பப் பாடப்பிரிவில் சேர்க்கவும் அதன் இயக்குநரகம் பரிந்துரை செய்துள்ளது. அதையேற்று, உயர்கல்விக்கான விருப்பப்பாடப்பிரிவில் NCC சேர்க்கப்படு –கிறது. இதை அனைத்து கல்வி நிறுவனங்களும் உடனே அமல்படுத்த வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

---

**9. தேசிய, ஆசிய மாதிரி நீதிமன்ற போட்டியில் தமிழ்நாடு சட்ட பல்கலை. அணி முதலிடம்:**

தேசிய, ஆசிய மாதிரி நீதிமன்ற போட்டியில் தமிழ்நாடு சட்டப் பல்கலை மாணவர்கள் முதலிடம் பெற்றுள்ளனர். சர்வதேச புகழ்பெற்ற பிலிப் சி ஜீசப் சர்வதேச மாதிரி நீதிமன்ற போட்டியின் தேசிய மற்றும் ஆசிய சுற்றுப் போட்டிகள் கடந்த பிப்ரவரியில் நடைபெற்றன. இதில் பல்வேறு நாடுகளில் இருந்தும், ஐம்பது சட்டக்கல்லூரி மற்றும் பல்கலை மாணவர் அணியினர் பங்கேற்றனர்.

இப்போட்டியில், தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் சீர்மிகு சிறப்பு சட்டக் கல்லூரி மாணவர்கள் ஹுடா சயீது, ஹரிகிருஷ்ணன் பழனியப்பன், மீனாட்சி அண்ணாமலை, சோனு மேத்தா, சுவேதன் ஆகிய ஐவர் அடங்கிய அணி முதலிடத்தைப் பிடித்துள்ளது.

பத்து ஆண்டுகளுக்குப் பிறகு தென்னிந்தியாவில் தேசிய சட்டக்கல்லூரி மாணவர்கள் சாராத அணியினர் இச்சாதனையை படைத்துள்ளது குறிப்பி –டத்தக்கது. இத்தகவலை தமிழ்நாடு Dr அம்பேத்கர் சட்டப்பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது.

---

**1. சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்ட வெகுதொலைவில் உள்ள காமா–கதிரை உமிழும் பேரடையின் பெயர் என்ன?**

**அ) நேரோ–லைன் செபெர்ட் 1 ☑**



ஆ) ஆண்ட்ரோமெடா

இ) ஸ்மைக வே

ஈ) மில்க் லைன்

✓ அண்மையில், விண்வெளி அறிவியலாளர்கள் ஒரு புதிய செயற்பாட்டில் உள்ள பேரடையைக்கண்டுபிடித்தனர். இது, இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட காமா–கதிரை உமிழும் பேரடைகளிலேயே வெகுதொலைவில் உள்ளது என்று கருதப்படுகிறது. இந்தப் பேரடைக்கு, Narrow–Line Seyfert 1 (NLS1) பேரடை என்று பெயரிடப்பட்டுள்ளது. இது, பூமியிலிருந்து சுமார் 31 பில்லியன் ஒளியாண்டுகள் தொலைவில் அமைந்துள்ளது. இது ஓர் அரிய வான்பொருள் என்று விவரிக்கப்பட்டுள்ளது.

---

**2. 2020–21ஆம் ஆண்டில், முந்தைய ஆண்டை விடவும் எத்தனை சதவீதத்திற்கு நிகர மறைமுக வரி வசூல் அதிகரித்துள்ளது?**

அ) 1%

ஆ) 10%

**12.3%**

**இ) 12.3% ☑**

ஈ) 15%

✓ மத்திய நிதியமைச்சகம் வெளியிட்டுள்ள தரவுகளின்படி, 2020–21ஆம் ஆண்டில் நிகர மறைமுக வரி வசூல் முந்தைய நிதியாண்டுடன் ஒப்பிடும்போது 12.3% அதிகரித்துள்ளது. மொத்த வசூல் ₹10.71 இலட்சமாக உள்ளது. இதன்மூலம் 2020–21ஆம் நிதியாண்டில் நிர்ணயிக்கப்பட்ட மறைமுக வரி வசூல் இலக்கான ₹9.89 இலட்சத்தை அது தாண்டியது.

---

**3. வர்த்தக மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான, 'மத்திய ஆசிய' மையம் கட்டப்பட்டு வருகிற நாடுகள் எவை?**

**அ) உஸ்பெகிஸ்தான் மற்றும் கஜகஸ்தான் ☑**




ஆ) ஐக்கிய அமெரிக்க நாடுகள் மற்றும் இந்தியா

இ) சீனா மற்றும் ஜப்பான்

ஈ) ஐக்கிய அமெரிக்க நாடுகள் மற்றும் ஐக்கியப் பேரரசு

✓ 'மத்திய ஆசியா' என்பது வர்த்தகம் & பொருளாதார ஒத்துழைப்புக்கான ஒரு பன்னாட்டு மையத்தின் பெயராகும். இது, உஸ்பெகிஸ்தான் மற்றும் கஜகஸ்தான் ஆகிய இருநாடுகளின் எல்லைகளில் கட்டப்பட்டு வருகிறது. இந்த மையத்தில் நாளொன்றுக்கு இருதிசைகளிலும் இருந்து வரும் 35,000 பேர்வரை தங்கவைக்க முடியும். மேலும், 5,000 பொதியுந்துகள் வரை நிறுத்தமுடியும். இது, இரு நாடுகளுக்குமான ஒரு பெரிய தொழிற்துறை, வர்த்தகம் மற்றும் போக்குவரவு தளமாக செயல்படும்.

---

**4. தலைமைத் தேர்தல் ஆணையராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?**

**அ) சுஷில் சந்திரா ☑**



ஆ) பிரசன்ன சந்திரா

இ) அஜய் குமார் பல்லா

ஈ) இஞ்செட்டி சீனிவாஸ்

✓ இந்தியாவின் அடுத்த தலைமைத் தேர்தல் ஆணையராக சுஷில் சந்திரா அவர்களை இந்திய அரசு நியமித்துள்ளது. அவர், 2021 ஏப்.13ஆம் தேதி ஓய்வுபெற்ற சுனில் அரோராவைத் தொடர்ந்து இப்பதவிக்கு வந்துள்ளார். மத்திய நேரடி வரிகள் வாரியத்தின் முன்னாள் தலைவரான சுஷில் சந்திரா, 2019 பிப்.14 அன்று தேர்தல் ஆணையராக நியமிக்கப்பட்டார்.

---

**5. பின்வரும் எந்த நாட்டில், ஒரு கொலைகார ஆல்காவால் 4200 டன் சால்மன் கொல்லப்பட்டது?**

அ) ஐக்கியப் பேரரசு



ஆ) ஐக்கிய அமெரிக்க நாடுகள்

இ) கனடா

**ஈ) சிலி ☑**

✓ தென்னமெரிக்க நாடான சிலியில், 4200 டன்களுக்கும் அதிகமான சால்மன்களைக்கொன்ற ஒரு கொலைகார ஆல்கா பரவுவது கண்டறியப்பட்டுள்ளது. இப்பாசித்திரள்கள், நீரிருப்பை குறைக்க வழிவகுத்தது; அது, சால்மன் மீன்களை மூச்சுத்திணறலுக்கு உள்ளாக்கியது. இது, உலகின் இரண்டாவது மிகப்பெரிய சால்மன் உற்பத்தியாளரான சிலியில் பதிவு செய்யப்பட்ட, அண்மைய ஒரு பேரிறப்பு நிகழ்வாக கருதப்படுகிறது.

---

**6. ஐரோப்பிய ஆணையம் அதன் பொருளாதாரத்தை பசுமையாகவும் டிஜிட்டலாகவும் மாற்றுவதற்கு 2026ஆம் ஆண்டு வரை ஆண்டுதோறும் எவ்வளவு நிதியைத் திரட்ட திட்டமிட்டுள்ளது?**

**அ) 150 பில்லியன் யூரோக்கள் ☑**



ஆ) 1000 மில்லியன் அமெரிக்க டாலர்

இ) ₹1000 கோடி

ஈ) பூப்பந்து

✓ 2026ஆம் ஆண்டு வரை 150 பில்லியன் யூரோக்கள் கடன் வாங்க ஐரோப்பிய ஆணையம் திட்டமிட்டுள்ளது. இக்கடன் ஐரோப்பிய ஆணையம் அதன் பொருளாதாரத்தை பசுமையாகவும் டிஜிட்டல் மயமாகவும் மாற்ற பயன்படுத்தப்படும். முதன்மை ஒப்பந்த வலையமைப்புமூலம் ஏலம் மற்றும் ஆட்சிக்குழு மூலம் நிதி திரட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

---

**7. விராட் கோலியை விஞ்சி ICC ஆண்கள் ஒருநாள் பேட்டிங் தரவரிசையில் முதலிடம் வகிக்கும் பாகிஸ்தான் வீரர் யார்?**

**அ) பாபர் ஆசாம் ☑**



ஆ) ஹசன் அலி

இ) முகமது அமீர்

ஈ) பக்கர் ஜமான்

✓ ICC ஆண்கள் ஒருநாள் பேட்டிங் தரவரிசையில் பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர் பாபர் ஆசாம் முதலிடம் பிடித்தார். கடந்த 2003ஆம் ஆண்டுக்குப் பிறகு பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர் ஒருவர் முதலிடம் பிடிப்பது இதுவே முதல்முறையாகும். பாகிஸ்தான்–தென்னாப்பிரிக்க தொடரில் 13 புள்ளிகளைப் பெற்றதை அடுத்து இந்திய கேப்டன் மற்றும் பேட்ஸ்மேன் விராட் கோலியை பாபர் ஆசாம் விஞ்சினார்.

---

**8. நாட்டில் செயல்படும் வங்கிகள், காப்பீட்டாளர்கள் மற்றும் முதலீட்டு மேலாளர்கள் தங்கள் வணிகத்தால் நிகழும் காலநிலை மாற்றத்தின் தாக்கங்கள் குறித்து தெரிவிப்பதை கட்டாயமாக்கியுள்ள நாடு எது?**

அ) இந்தியா



**ஆ) நியூசிலாந்து ☑**

இ) ஆஸ்திரேலியா

ஈ) சுவிச்சர்லாந்து

✓ நியூசிலாந்து அரசு ஒரு புதிய சட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது; இதன்மூலம் நாட்டில் செயல்படும் வங்கிகள், காப்பீட்டாளர்கள் மற்றும் முதலீட்டு மேலாளர்கள் தங்கள் வணிகத்தால் நிகழும் காலநிலை மாற்றத்தின் தாக்கங்களை தெரிவிக்க வேண்டும். இத்தகைய சட்டத்தைக் கொண்டு வந்த முதல் நாடு நியூசிலாந்து. இப்புதிய சட்டத்தின்படி, NZ$ 1 பில்லியனுக்கும் அதிகமான சொத்துக்களைக் கொண்ட வங்கிகளும், காப்பீட்டாளர்களும் இதனை தெரிவித்தல் வேண்டும்.

---

**9. NEGVAC'இல் உள்ள 'C' என்பது எதைக் குறிக்கிறது?**

அ) Commission



ஆ) Collection

இ) Corruption

**ஈ) COVID–19 ☑**

✓ தடுப்பூசி கொள்முதல், இருப்புநிலை மேலாண்மை, தடுப்பூசி தெரிவுசெய்தல், தடுப்பூசி விநியோகம் மற்றும் கண்காணிப்பு பொறிமுறைக்காக இந்திய அரசாங்கத்தால் COVID–19'க்கான தடுப்பூசி நிர்வாகம் குறித்த தேசிய வல்லுநர் குழு (National Expert Group on Vaccine Administration for COVID–19 (NEGVAC)) அமைக்கப்பட்டது.

✓ அண்மையில், அந்நிபுணர் குழு, வெளிநாடுகளில் தயாரிக்கப்பட்ட மற்றும் ஐக்கிய அமெரிக்க நாடுகள், ஐரோப்பா, இங்கிலாந்து, ஜப்பான் ஆகிய நாடுகளின் அதிகாரிகளால் அவசர ஒப்புதல் வழங்கப்பட்ட COVID-19 தடுப்பூசிகளை பரிந்துரை செய்துள்ளது. உலக நலவாழ்வு அமைப்பின் அவசரகால பயன்பாட்டு பட்டியலில் பட்டியலிடப்பட்ட COVID-19 தடுப்பூசி-களுக்கும் இந்தியாவில் அவசரகால பயன்பாட்டுக்கு ஒப்புதல் வழங்கப்ப-டலாம் எனக் கருதப்படுகிறது.

---

**10. தேசிய நாற்றுப்பண்ணை வலைத்தளத்தைத் தொடங்கியுள்ள வாரியம் அல்லது அமைப்பு எது?**

அ) தேசிய வீட்டுவசதி வாரியம்

**ஆ) தேசிய தோட்டக்கலை வாரியம் ☑**

இ) தேசிய தேயிலை வாரியம்

ஈ) NITI ஆயோக்

✓ தேசிய நாற்றுப்பண்ணை வலைத்தளத்தை தேசிய தோட்டக்கலை வாரியம் தொடங்கியுள்ளது. இது ஒரு வலைத்தளம் மற்றும் திறன்பேசி வடிவத்தில் கிடைக்கப்பெறும் ஒரு இணையதளமாகும். நாற்றுப்பண்-ணைகளும் வாங்குவோரும் தாவரங்களின் விற்பனை தொடர்பாக தொடர்புகொள்ளக்கூடிய இணையவழி சந்தைப்புறத்தை உருவாக்க இந்த வலைத்தளம் நோக்கங்கொண்டுள்ளது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. செவ்வாய் கிரகத்தில் பறந்த முதல் ஹெலிகாப்டர்!**

அமெரிக்க விண்வெளி நிறுவனமான NASA, செவ்வாய் கிரகத்துக்கு பெர்சிவரன்ஸ் விண்கலத்துடன் இணைத்து அனுப்பியுள்ள ஹெலிகாப்டர் வெற்றிகரமாகப் பறந்தது. இதன்மூலம் வேற்றுக்கிரகத்தில் பறந்த முதல் ஹெலிகாப்டர் என்ற பெருமையை அதுபெற்றது.

செவ்வாய் கிரகத்தில் இன்ஜெனிட்டி ஹெலிகாப்டர் வெற்றிகரமாகப் பறந்த-தை 'ரைட் சகோதரர்கள்' தருணம் என விஞ்ஞானிகள் கூறுகின்றனர். 1903ஆம் ஆண்டு ரைட் சகோதரர்களின் முதல் விமானம் வெற்றிகரமாகப் பறந்தது. உலகிலேயே முதல் விமானமான அதன் இறக்கையில் இடம்பெற்-றிருந்த துணியின் ஒரு சிறிய பகுதி இன்ஜெனியூட்டி ஹெலிகாப்டரில் பொருத்தப்பட்டுள்ளது. அமெரிக்காவின் வடக்கு கரோலினாவில் ரைட் சகோதரர்களின் முதல் விமானம் படைத்த சாதனையை செவ்வாய் கிரகத்தில் படைத்துள்ளது இன்ஜெனியூட்டி ஹெலிகாப்டர்.

---

**2. கரோனா முன்களப் பணியாளர்களுக்குப் புதிய காப்பீட்டுத் திட்டம்**

கரோனா நோய்த்தொற்றுக்கு எதிராகப் போராடி வரும் முன்களப் பணியா-ளர்களுக்குப் புதிய காப்பீட்டுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட உள்ளதாக மத்திய சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக, அந்த அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில், 'பிரதமரின் ஏழைகள் நலன் தொகுப்புத் திட்டத்தின்கீழ் கரோனா முன்களப் பணியாளர்களுக்கான காப்பீட்டுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தது. அத்திட்டத்தின் கீழ் 287 பேர் காப்பீட்டுத் தொகையைப் பெற்றுள்ளனர்.

கரோனா நோய்த்தொற்றுக்கு எதிரான போராட்டத்தில் முன்னின்று பணியாற்றிவரும் முன்களப் பணியாளர்களின் மனவலிமையை இந்தக் காப்பீட்டுத் திட்டம் மேம்படுத்தியுள்ளது. வரும் 24ஆம் தேதி வரை இந்தக் காப்பீட்டுத் திட்டம் நடைமுறையில் இருக்கும். அதுவரை இத்திட்டத்தின் கீழ் காப்பீட்டுத் தொகையைக் கோரமுடியும்.

அதன்பிறகு கரோனா முன்களப் பணியாளர்களுக்கென புதிய காப்பீட்டுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பிரதமரின் ஏழைகள் நலன் தொகுப்புத்திட்டமானது கடந்தாண்டு மார்ச்சில் அறிவிக்கப்பட்டது. பின்னர் அத்திட்டமானது மூன்றுமுறை நீட்டிக்கப்பட்டது. அத்திட்டத்தின்கீழ் ₹50 இலட்சம் காப்பீடு பெற முடியும்.

கரோனா நோய்த்தொற்றுக்கு எதிராகப் போராடி வரும் முன்களப் பணியா-ளர்கள் உயிரிழக்க நேரிட்டால், அவர்களின் குடும்பத்தினர் பலனடையும் நோக்கில் காப்பீட்டுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

---

**3. SIDBI வங்கியின் தலைவராக எஸ். இராமன் பொறுப்பேற்பு**

SIDBI வங்கி என்று சுருக்கமாக அழைக்கப்படும் இந்திய சிறுதொழில் மேம்பாட்டு வங்கியின் தலைவராக சிவசுப்ரமணியன் இராமன் பொறுப்பே-ற்றுக்கொண்டார்.

இதுகுறித்து அந்த வங்கி வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது: SIDBI வங்கியின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநராக சிவசுப்ரமணிய-ன் இராமன் பொறுப்பேற்றுள்ளார். இவர், மூன்று ஆண்டுகளுக்கு அந்தப் பொறுப்பை வகிப்பார் என SIDBI வங்கி தெரிவித்துள்ளது. கடந்த 1991ஆம் ஆண்டு இந்திய தணிக்கை மற்றும் கணக்குகள் பணிக்கு (IA&AS) தேர்வான இராமன், இதற்கு முன் தேசிய மின்னாளுகை சேவைகள் நிறு-வனத்தின் நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அதிகாரியாக பணியாற்றியவர்.

---

**4. ஒலிம்பிக்கில் சென்னை மாணவி**

சென்னையைச் சேர்ந்த மாணவி நேத்ரா குமணன், ஒலிம்பிக் பாய்மரப் படகுப் போட்டிக்குத் தகுதிபெற்றுள்ளார். ஒலிம்பிக் படகுப் போட்டிக்குத் தகுதிபெறும் முதல் இந்தியப் பெண் இவர். 2020 உலகக் கோப்பை பாய்மரப் படகுப் போட்டியில் சாம்பியன் பட்டம் வென்றவர் இவர்.

---

**1. இந்தியாவில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டத்தில் ஈடுபடவுள்ள தொழில்நுட்ப நிறுவனம் எது?**

அ) அமேஸான்

**ஆ) பேஸ்புக் ☑**

இ) மைக்ரோசாப்ட்

ஈ) சாம்சங்

✓ தொழில்நுட்ப மற்றும் சமூக ஊடக நிறுவனமான பேஸ்புக், இந்தியாவில், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டத்தில் ஈடுபடுவதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. இந்தியாவில் இதுபோன்ற ஓர் ஒப்பந்தத்தில் பேஸ்புக் ஈடுபடுவது இது முதல் முறையாகும். இந்தியாவின் மின்சார கட்டமைப்பில் புதுப்பிக்கத்தக்க மின்சாரத்தை வழங்குவதற்காக பேஸ்புக் மற்றும் கிளீன்மேக்ஸ் இணைந்து செயல்படவுள்ளன. 32 மெகாவாட் காற்றாலை மின்னுற்பத்தி திட்டமானது கர்நாடகவில் அமைந்துள்ளது.

---

**2. "EatSmart Cities" சவால் மற்றும் "Transport 4 All" சவால் என இரு சவால்களை அறிமுகப்படுத்தியுள்ள மத்திய அமைச்சகம் எது?**

அ) உள்துறை அமைச்சகம்

**ஆ) வீட்டுவசதி & நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம் ☑**



இ) சுகாதார மற்றும் குடும்பநல அமைச்சகம்

ஈ) பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம்

✓ மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகமானது "EatSmart Cities Challenge மற்றும் Transport 4 All Challenge" ஆகிய இரு சவால்களை அறிமுகப்படுத்தியுள்ளது. 'EatSmart Cities' சவாலானது இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையம் (FSSAI) மற்றும் சீர்மிகு நகரங்கள் திட்டத்துடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டு–ள்ளது. சீர்மிகு நகரங்கள் நிலையான உணவுச் சூழலை வளர்ப்பதை ஊக்குவிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

✓ 'Transport 4 All' என்ற சவால் பொதுப்போக்குவரத்தை மேம்படுத்துவதற்–காக போக்குவரத்து மற்றும் மேம்பாட்டுக்கொள்கை நிறுவனத்துடன் இணைந்து தொடங்கப்பட்டுள்ளது.

---

**3. பயங்கரவாதிகளால் இணையம் தவறாகப் பயன்படுத்தப்படுவது குறித்த BRICS கருத்தரங்கை நடத்திய அமைப்பு எது?**

அ) NITI ஆயோக்

ஆ) இந்திய இராணுவம்

**இ) தேசிய புலனாய்வு முகமை ☑**

ஈ) CDAC

✓ தேசிய புலனாய்வு முகமை ஏற்பாடுசெய்த "பயங்கரவாத நோக்கங்களுக்–காக இணையத்தை தவறாக பயன்படுத்துதல் மற்றும் பயங்கரவாத புலனாய்வுகளில் டிஜிட்டல் தடயவியலின் பங்கு" என்ற BRICS கருத்தரங்–கை இந்தியா நடத்தியது. இது, மெய்நிகர் வடிவத்தில் ஏற்பாடு செய்யப்ப–ட்ட 2 நாள் நிகழ்வாகும். இது, சர்வதேச ஒத்துழைப்பு மற்றும் இணைய பயங்கரவாதத்தை கையாள்வதில் நன்னடைமுறைகளை தடையின்றி பகிர்ந்துகொள்வது ஆகியவற்றை வலியுறுத்தியது.

---

**4. செப்.11'க்குள் பின்வரும் எந்நாட்டிலிருந்து அமெரிக்க துருப்புகளை திரும்பப்பெற ஐக்கிய அமெரிக்க நாடுகள் முடிவு செய்துள்ளது?**

அ) ஈரான்

ஆ) ஈராக்



இ) உக்ரைன்

**ஈ) ஆப்கானிஸ்தான் ☑**

✓ அதிபர் பைடன் தலைமையிலான அமெரிக்கா, அடுத்த சில மாதங்களில் ஆப்கானிஸ்தானில் இருந்து அனைத்து அமெரிக்க துருப்புக்களையும் திரும்பப்பெற முடிவுசெய்துள்ளது. 2021 செப்.11'க்குள் இது நிறைவடைய உள்ளது. இத்தேதி, தாலிபான்கள், அமெரிக்காவின் இரட்டை கோபுரத்தி–ன் மீது தாக்குதல் நடத்திய 20ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கிறது.

---

**5. ஆறு மாநிலங்களில் உள்ள நூறு கிராமங்களில் ஒரு சோதனை திட்டத்தை மேற்கொள்வதற்காக, மத்திய வேளாண் அமைச்சகத்துட–னான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட அமைப்பு எது?**

அ) அமேசான்

**ஆ) மைக்ரோசாப்ட் ☑**

இ) NSDC

ஈ) ONGC

✓ உத்தர பிரதேசம், மத்திய பிரதேசம், குஜராத், ஹரியானா, இராஜஸ்தான் மற்றும் ஆந்திர பிரதேசம் ஆகிய ஆறு மாநிலங்களின் உள்ள நூறு கிராம–ங்களில் சோதனை அடிப்படையிலான திட்டத்தை செயல்படுத்த மத்திய வேளாண் அமைச்சகம் மைக்ரோசாப்ட்டுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது. இந்தத் திட்டத்தின்கீழ், சீரான மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட விவசாயத்திற்கான உழவர் இடைமுகத்தை மைக்ரோசாப்ட் உருவாக்கு–ம். இதில், அறுவடைக்கு பிந்தைய மேலாண்மை மற்றும் விநியோகம் ஆகியவை அடங்கும்.

---

**6.எந்த அமைச்சகத்தின் ஆதரவின்கீழ், "ஹைட்ரஜன் பொருளாதாரம் – இந்திய பேச்சுவார்த்தை – 2021" ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது?**

**அ) பெட்ரோலிய & இயற்கை எரிவாயு அமைச்சகம் ☑**

ஆ) புதிய & புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம்

இ) எரிசக்தி அமைச்சகம்

ஈ) பாதுகாப்பு அமைச்சகம்

✓ மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகத்தின் கீழ், எரிசக்தி மன்றமும் இந்திய பெட்ரோலிய தொழிந்துறை கூட்டமைப்பும் இணைந்து "ஹைட்ரஜன் பொருளாதாரம்–இந்திய உரையாடல்–2021" என்ற தலைப்பில் ஒரு வட்டமேசை மாநாட்டை ஏற்பாடு செய்தன.

✓ இந்த வட்டமேசை மாநாடு, 2021 ஏப்.15 அன்று ஒரு மெய்நிகர் முறையில் நடத்தப்பட்டது. வளர்ந்துவரும் ஹைட்ரஜன் சூழல் அமைப்புகள் பற்றிய விவாதங்கள் மற்றும் ஒத்துழைப்புக்கான வாய்ப்புகளை ஆராய்வது இம்மாநாட்டின் நிகழ்ச்சி நிரலாகும்.

---

**7. "My Body My Own" என்ற தலைப்பிலான அறிக்கையொன்றை வெளியிட்ட நிறுவனம் எது?**

அ) உலக வங்கி

**ஆ) UNFPA ☑**

இ) பில் & மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளை

ஈ) ஐநா பெண்கள் அமைப்பு


✓ ஐநா மக்கள்தொகை நிதியத்தின் (UNFPA) உலக மக்கள்தொகை அறிக்–கை 2021 ஆனது அண்மையில் வெளியிடப்பட்டது.

✓ "My Body My Own" என்ற தலைப்பிலான இந்த அறிக்கை, 55% பெண்கள் மட்டுமே தங்களின் முடிவை தாங்களே எடுத்துக்கொள்ள மு–ழு அதிகாரம் பெற்றவர்களாக உள்ளனர். 57 வளரும் நாடுகளைச் சார்–ந்த பாதி பெண்கள், அவர்களின் உடல்குறித்து முடிவெடுப்பதற்கும், கரு–த்தடை சாதனங்களைப்பயன்படுத்துவதற்கும், நலத்தைப்பேணுவதற்–கும் / அவர்களின் பாலுணர்வு எண்ணம்குறித்து முடிவெடுப்பதற்கும்கூட உரிமையற்றவர்களாக உள்ளனர்.

---

**8. ஜான்சன் மற்றும் ஜான்சன் மற்றும் அஸ்ட்ராஜெனெகா தயாரித்த COVID–19 தடுப்பூசிகள், கீழ்காணும் எந்த வைரசை அடிப்படையாகப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்டன?**

**அ) அடினோ வைரஸ் ☑**



ஆ) பப்பாவா வைரஸ்

இ) ஹெர்பெஸ் வைரஸ்

ஈ) பாக்ஸ் வைரஸ்

✓ அடினோவைரஸ்கள் என்பது மனிதர்களில் கோழை, இரைப்பை / குடல் தொற்று, இளஞ்சிவப்புக்கண் நோய் போன்ற பலவிதமான நோய்களை ஏற்படுத்தும் வைரஸ்களின் ஒரு குடும்பமாகும்.

✓ மனிதர்களைப் பாதிக்கும் 88 வகையான அடினோவைரஸ் உள்ளன, இவை A–G என ஏழு வெவ்வேறு இனங்களாக தொகுக்கப்பட்டுள்ளன.

சமீபத்தில், ஜான்சன் & ஜான்சன் மற்றும் அஸ்ட்ராஜெனெகா உள்ளிட்ட பல்வேறு COVID-19 தடுப்பூசிகளின் உற்பத்திக்கு இந்த வைரஸ் அடிப்படையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

---

**9. காடுகளைப் பொறுத்தவரை, குளிர்காலம் மற்றும் பருவமழைக் காலம் ஆகியவற்றுக்கு இடையேயான பருவம் என்ன?**



அ) மழைக்காலம்

**ஆ) காட்டுத்தீ காலம் ☑**

இ) பின்பனிக்காலம்

ஈ) வசந்த காலம்

✓ 'காட்டுத்தீ காலம்' என்று குறிப்பிடப்படும் குளிர்காலம் & பருவமழைக் காலத்துக்கு இடையிலான பருவம், இந்தியாவில், காலநிலை மாற்றம் மற்றும் இமயமலைப் பகுதிகளில் பொழிந்த பெருமழையின் காரணமாக அதிகரித்து வருகிறது. உத்தரகாண்ட் காடுகள், கடந்த ஆறு மாதங்களாக காட்டுத்தீக்கு உள்ளாகி வருகின்றன. உத்தரகாண்ட் காடுகளில் நவம்பர் 2020 முதல் ஜனவரி 2021 வரை 470 தீ விபத்துக்கள் நிகழ்ந்துள்ளன. கடந்த ஆண்டில் இந்த எண்ணிக்கை 39 ஆக இருந்தது.

---

**10. 'பழங்குடி மக்கள் பதிவேட்டை' தயாரிப்பதற்காக குழுவொன்றை அமைக்கவுள்ள மாநிலம் எது?**

அ) தமிழ்நாடு

ஆ) அருணாச்சல பிரதேசம்

இ) கேரளா

**ஈ) நாகாலாந்து ☑**

✓ நாகாலாந்து மாநில அரசாங்கம் அம்மாநிலத்தில் வசிக்கும் பழங்குடியின மக்களுக்கான ஒரு பதிவேட்டை உருவாக்குவதற்காக ஒரு கூட்டு ஆலோசனை குழுவை அமைக்க முடிவுசெய்துள்ளது. 2019 ஜூலையில், நாகாலாந்து அரசாங்கம் RIIN'ஐ அறிமுகப்படுத்தியது. அது, அஸ்ஸாம் மாநிலத்தின் தேசிய குடிமக்களின் பதிவேட்டின் ஒரு வகையாகும். இந்தக் குழு, நாகாலாந்து மாநில பழங்குடி மக்களின் பதிவேட்டைத் (Register of Indigenous Inhabitants of Nagaland (RIIN)) தயாரிக்கும்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. இறக்குமதி செய்யப்படும் கரோனா தடுப்பூசிகளுக்கு சுங்க வரி தள்ளுபடி**

வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படவுள்ள கரோனா தடுப்பூசிகளுக்கு சுங்கவரியில் 10% தள்ளுபடி வழங்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. நாட்டில் 45 வயதைக்கடந்தோருக்கு கரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டு வருகிறது. தற்போதைய சூழலில், உள்நாட்டுத்தயாரிப்பான கோவேக்ஸின், கோவிஷீல்ட் ஆகிய தடுப்பூசிகள் மட்டுமே மக்களுக்கு செலுத்தப்பட்டு வருகின்றன.

ரஷியாவில் தயாரிக்கப்பட்ட ஸ்புட்னிக்-வி தடுப்பூசியின் பயன்பாட்டுக்கு மத்திய அரசு அனுமதி அளித்துள்ளபோதிலும், அது மக்களுக்கு இன்னும் செலுத்தப்படவில்லை. தொடக்கத்தில் அத்தடுப்பூசி ரஷியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு மக்களுக்கு அளிக்கப்படவுள்ளது. பின்னர் இந்தியாவிலேயே உற்பத்தி செய்யப்படவுள்ளது. அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன் நாடுகளில் அனுமதி அளிக்கப்பட்டுள்ள COVID தடுப்பூசிகளை இந்தியாவிலும் பயன்பாட்டுக்கு கொண்டுவருவதற்கு அனுமதி அளிப்பது தொடர்பாக மத்திய அரசு ஆலோசித்து வருகிறது.

18 வயதைக் கடந்த அனைவரும் மே 1ஆம் தேதிமுதல் கரோனா தடுப்பூசி செலுத்திக்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அவ்வாறான சூழலில், கரோனா தடுப்பூசிக்குத் தட்டுப்பாடு நிலவாமல் இருப்பதை உறுதி செய்ய வெளிநாடுகளில் இருந்து கரோனா தடுப்பூசிகள் இறக்குமதி செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிலையில், வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் கரோனா தடுப்பூசிகளுக்கு 10 சதவீத சுங்கவரித் தள்ளுபடி அளிக்கப்படவுள்ளதாக மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

இறக்குமதி செய்யப்படும் தடுப்பூசிகளின் விலை, உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் தடுப்பூசிகளின் விலைக்கு இணையாக இருப்பதை உறுதி செய்யும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகத் தெரிகிறது.

வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் தடுப்பூசிகளுக்குத் தற்போதைய சூழலில், 10% சுங்கவரியும், 16.5% சரக்கு-சேவை வரியும் விதிக்கப்படுகிறது. சுங்கவரிக்கு தள்ளுபடி அளிப்பது தொடர்பான முடிவை மத்திய அரசு விரைவில் வெளியிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

---

**2. 57 லட்சம் வழக்குகள் தேக்கம்: ஓய்வு பெற்ற நீதிபதிகளை நியமிக்க உச்சநீதிமன்றம் புதிய வழிமுறைகள்**

உயர்நீதிமன்றங்களில் தேங்கிக் கிடக்கும் சுமார் 57 லட்சம் வழக்குகளை விரைந்து விசாரித்து தீர்வுகாண ஓய்வுபெற்ற நீதிபதிகளை தற்காலிக முறையில் நியமிக்க ஏதுவாக புதிய வழிமுறைகளை உச்சநீதிமன்றம் வகுத்துள்ளது. இதன்மூலம் மிகவும் அரிதான வகையில், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 224A பிரிவைப் பயன்படுத்தி, உயர்நீதிமன்ற தலைமை நீதிபதிகள் எந்த நேரத்திலும் குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்று 2 அல்லது மூன்று ஆண்டு காலத்துக்கு ஓய்வுபெற்ற நீதிபதிகளை நியமனம் செய்ய வழிவகுக்கிறது.

'லோக் பிரஹாரி' என்ற தன்னார்வத் தொண்டு அமைப்பு தாக்கல் செய்த மனு மீது தலைமை நீதிபதி SA போப்டே, நீதிபதிகள் S K கௌல், சூர்ய காந்த் ஆகியோர் அடங்கிய அமர்வு 37 பக்கங்களைக்கொண்ட உத்தரவை வழங்கியது.

**'நாட்டிலேயே சென்னை உயர்நீதிமன்றத்தில் அதிக நிலுவை வழக்குகள்'**

நாட்டில் உள்ள 25 உயர்நீதிமன்றங்களில் சென்னை உயர்நீதிமன்றத்தில்தான் அதிகபட்சமாக 5.8 இலட்சம் வழக்குகள் நிலுவையில் உள்ளன என்று உச்சநீதிமன்ற நீதிபதிகள் தெரிவித்தனர். சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிபதிகளின் காலிப்பணியிடங்கள் வெறும் ஏழு சதவீதமாக இருந்தாலும், நிலுவை வழக்குகளின் அடிப்படையில் அனுபவம்மிக்க ஓய்வு பெற்ற நீதிபதிகளை நியமிக்கும் தேவை எழுந்துள்ளது என்று தலைமை நீதிபதி உள்ள அமர்வு தெரிவித்தது.

சென்னை, மும்பை, இராஜஸ்தான், அலாகாபாத், பஞ்சாப் & ஹரியானா ஆகிய ஐந்து நீதிமன்றங்களில் மட்டும் 57,51,312 இலட்சம் வழங்குகள் நிலுவையில் உள்ளன என்றும் தலைமை நீதிபதி அமர்வு குறிப்பிட்டது.

---

**3. G7 வெளியுறவு அமைச்சர்கள் மாநாடு: இந்தியாவுக்கு பிரிட்டன் அழைப்பு**

G7 வெளியுறவுத் துறை அமைச்சர்கள் மாநாட்டில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்க இந்தியாவுக்கு பிரிட்டன் அரசு அழைப்புவிடுத்துள்ளது. இதுகுறித்து பிரிட்டன் வெளியுறவு, காமன்வெல்த் மற்றும் மேம்பாட்டு அலுவலகம் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது: G7 வெளியுறவுத்துறை அமைச்சர்கள் மாநாடு, இலண்டனில் வரும் மே.3 முதல் 5 வரை நடக்கவுள்ளது. அமைச்சர்கள் நேரில் பங்கேற்கும் இம்மாநாட்டில் கனடா, பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான், அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய 7 நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்களும், ஐரோப்பிய யூனியன் பிரதிநிதிகளும் பங்கேற்கவுள்ளனர்.

இந்த மாநாட்டில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்குமாறு இந்தியா, ஆஸ்திரேலியா, தென்கொரியா, தென்னாப்பிரிக்கா ஆகிய நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்களுக்கும் ASEAN (தென்கிழக்காசிய நாடுகள்) அமைப்பின் பொதுச்செயலருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த மாநாட்டில் இந்தியா சார்பில் வெளியுறவுத்துறை அமைச்சர் S ஜெய்சங்கர் பங்கேற்பார் என்று தெரிகிறது.

---

**4. அன்னபூர்ணா சிகரத்தில் ஏறி இந்தியப் பெண் சாதனை**

உலகின் பத்தாவது உயரமான சிகரமான அன்னபூர்ணா சிகரத்தில் ஏறி சாதனை படைத்துள்ளார் மகாராஷ்டிரத்தைச் சேர்ந்த 28 வயது பெண் பிரியங்கா மோஹிதே. இந்தச் சாதனையை நிகழ்த்திய முதல் இந்தியப் பெண் அவர். இமயமலைத்தொடரில் நேபாளத்தில் அமைந்துள்ள சிகரம் அன்னபூர்ணா. இது 8,091 மீட்டர் உயரம் கொண்டது. ஏறுவதற்கு மிகக் கடினமான மலைகளில் ஒன்றாக இது கருதப்படுகிறது.

மேற்கு மகாராஷ்டிரத்தின் சதாரா பகுதியைச் சார்ந்த அவர், மருந்து உற்பத்தி நிறுவனமான பயோகான் நிறுவனத்தின் ஆராய்ச்சிப் பிரிவில் பணியாற்றி வருகிறார். கடந்த 2013இல் உலகின் மிகவுயரமான எவரெஸ்ட் சிகரத்திலும் (8,849 மீட்டர்), 2018இல் லோட்ஸே சிகரத்திலும் (8,516 மீட்டர்), 2016இல் மக்காலு சிகரம் (8,485 மீட்டர்), கிளிமஞ்சாரோ சிகரம் (5,895 மீட்டர்) ஆகியவற்றிலும் பிரியங்கா ஏறியுள்ளார்.

கடந்த 2017-2018இல் சாகச விளையாட்டுகளுக்காக மகாராஷ்டிர அரசின் "சிவ சத்ரபதி" விருது பெற்றுள்ளார் பிரியங்கா.

---

**5. துளிகள்**

ஆசிய பளுதூக்குதல் சாம்பியன்ஷிப் போட்டியில் ஆடவருக்கான 73 கிலோ 'குரூப் பி'-இல் இந்தியாவின் அச்சிந்தா ஷியுலி 7-ஆம் இடமும், 67 கிலோ பிரிவில் ஜெரிமி லால்ரினுங்கா 8-ஆம் இடமும் பிடித்தனர்.

இங்கிலீஷ் பிரீமியர் லீக் கால்பந்து போட்டியில் லிவர்பூல்-லீட்ஸ் அணிகள் மோதிய ஆட்டம் 1-1 என்ற கோல்கணக்கில் டிரா ஆனது. லிவர்பூல் தரப்பில் சாடியோ மனே, லீட்ஸ் தரப்பில் டியேகோ லாரென்டே ஆகியோர் கோலடித்தனர்.

இலங்கை-வங்கதேச அணிகள் மோதும் இரண்டு டெஸ்டுகள்கொண்ட தொடரின் முதல் டெஸ்ட் பல்லகேலேவில் தொடங்குகிறது.

இந்தியாவில் முதன்முறையாக வரும் மே.1 அன்று நடத்தப்படும் டபிள்யூபிசி இந்திய சாம்பியன்ஷிப் குத்துச்சண்டை போட்டியில் சாந்தினி மெஹரா – சுமன் குமாரி லைட்வெயிட் பிரிவில் மோதுகின்றனர்.

---

**6. கங்கைகொண்ட சோழபுரத்தில் அகழாய்வுப் பணிகள் தொடக்கம்**

அரியலூர் மாவட்டம், கங்கைகொண்ட சோழபுரம், மாளிகைமேட்டில் முதற்கட்ட அகழாய்வுப்பணிகள் தொடங்கி நடைபெற்று வருகின்றன. கீழடி, ஆதிச்சநல்லூர் மற்றும் அரியலூர் மாவட்டம் கங்கைகொண்டசோழபுரம் உள்ளிட்ட பகுதிகளில் அகழாய்வுப்பணிகள் தொடங்கப்படும் என தமிழக அரசு அறிவித்திருந்தது.

அதன்படி கங்கைகொண்ட சோழபுரம் மற்றும் அதனைச்சுற்றியுள்ள பகுதிகளில் தமிழ்நாடு தொல்லியல் துறைமூலம் அகழாய்வுக்கான இடம்தேர்வு செய்யும் பணிகள் கடந்த ஜனவரியில் தொடங்கியது. அப்போது முதற்கட்டமாக கங்கைகொண்ட சோழபுரம் மற்றும் அதனைச்சுற்றியுள்ள பகுதிகளில் ஆளில்லா விமானம்கொண்டு நிழற்படக்கருவிமூலம் நிழற்படம் எடுத்து மத்திய தொல்லியல் துறைக்கு தமிழ்நாடு அரசு அனுப்பிவைத்தது.

இதைத்தொடர்ந்து, தற்போது கங்கைகொண்ட சோழபுரத்தில் மாளிகைமேடு என்ற இடத்தில் அகழாய்வுப்பணிகள் தொடங்கி தீவிரமாக நடைபெற்று வருகிறது. 'மாமன்னன்' இராஜேந்திர சோழன் வாழ்ந்த அரண்மனை, செப்பேடுகள், பயன்படுத்தப்பட்ட பொருள்கள்போன்ற வரலாற்று பொக்கிஷங்களைக் கண்டறியும் வகையில் அகழாய்வுப்பணிகள் தற்போது முடுக்கி விடப்பட்டுள்ளது. இதுகுறித்து தமிழ்நாடு தொல்லியல் துறையினர் கூறுகையில், தமிழ்நாடு முழுவதும் ஏழு மாவட்டங்களில் அகழாய்வுப்பணிகள் தொடங்கப்பட இருக்கிறது. ஏற்கனவே கீழடி, ஆதிச்சநல்லூர்போன்ற இடங்களில் அகழாய்வுப்பணிகள் தொடங்கிவிட்டன. கங்கைகொண்ட சோழபுரத்தில் அகழாய்வுப்பணிகள் நடைபெறுவதற்கான இடங்கள் ஏற்கனவே முதல்நிலை ஆய்வுசெய்து முடிக்கப்பட்டுள்ளது.

அதன்படி முதற்கட்ட அகழாய்வை தற்போது மாளிகைமேடு என்ற பகுதியில் தொடங்கியுள்ளோம். தமிழ்நாடு தொல்லியல் துறை சார்பில் நால்வர் கொண்ட குழுவினர் தலைமையில் 35 தொழிலாளர்களைக் கொண்டு அகழாய்வு நடைபெற்று வருகிறது. மேற்கண்ட ஆய்வில் பழங்கால கூரை ஓடுகள், பானை ஓடுகள், இரும்பினால் ஆன பொருள்கள், செம்புக்காசுகள் ஆகியவை கிடைக்கப்பெற்றுள்ளன. செப்டம்பர் மாதம் வரை இந்த ஆய்வு நடைபெறும்.

---